# திராவிடன்

R.T.ARASU

ஆசிரியர்
என். வி. நடராசன்


உள்ளே!

○

அறிஞர் அண்ணா

○

நாவலர் நெடுஞ்செழியன்
கலைஞர் கருணாநிதி
பேராசிரியர் அன்பழகன்

○

கே. ஏ. மதியழகன்
சிந்தனைச்சிற்பி சிற்றரசு
டாக்டர் சத்தியவாணிமுத்து
எ. கோவிந்தசாமி

○


கவிஞர் வாணிதாசன்
சேரன்தம்பி
மா. தங்கவேலர்

○

கவிஞர் மயிலை. முத்தெழிலன்
ச. வெ. பாண்டியன்
நெல்லை இளங்கோவன்
என். வி. என். சோமு

○

விலை: 25 காசு.



மே நாள் சிறப்பிதழ்

# தொழிலாளர்களும் 'மே'--நாளும்!

**பேராசிரியர் க. அன்பழகன் M.A., M.L.C.**

உலகெங்கும், நாடுகள் பலவும் மேதினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றன. தொழிலாளர்கள்—அனைவரும், பேரணி எனத்திரண்டு எழுச்சிகொண்டு, உரிமைகோரி முழங்குகின்றனர்.

தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும்—சிறிதுசிறிதாக எடுத்துரைக்கப்பட்டு, அறநெறியுணர்ந்த அரசினர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன,

ஒவ்வொரு நாளும்—எட்டு மணி நேர உழைப்பு—எட்டு மணி நேரக் களிப்பு—எட்டு மணி நேர ஓய்வு—என்னும் முறைகொண்டே தொழிலாளர்களும் துன்பம் நீங்கி—தொழிலிலும் மிகுந்த பலன் காணமுடியும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.



எட்டு மணி நேர உழைப்பு—என்பதால்—ஒரு நாளின் எந்த வேளையிலும் எட்டு மணி நேரம் வற்புறுத்தப்படுவது முறையாகாது.

காலையிலும் மாலையிலும்—உழைப்பது எளிது நடுப்பகல் எனில், அதுவும் வெப்பம் மிகுந்த நாட்டில் சிறிது ஓய்வுதேவை. நள்ளிரவில்—குறிப்பாக இரவு 2-மணிமுதல் 4-மணிவரை—எவருக்கும் உறக்கம் தேவை. இவைகளைக் கூர்ந்து நோக்கியே — வேலை நேரத்தை அமைத்திட வேண்டும்.

அப்படி உழைப்புக்கு ஏற்றநேரம் கருதப்படாவிடில்—தொழிலாளிகள் விபத்துக்கு ஆளாவதும், வலுவிழந்து நிற்பதும், நோய்நொடியில் தள்ளப்படுவதும் இயல்பாகிவிடுகிறது.

அடுத்து சக்திக்கேற்ற உழைப்பு—தேவைக்கேற்ற வசதி—என்னும் நெறி ஒரு நாட்டு மக்கள் அனைவருக்குமே ஏற்புடைத்து எனினும், தொழிலாளிகள் நிலையில், கைக்கொள்ளப்படுவது இன்றியமையாததாகும்.

தொழிலாளர்கள், அவர்தம் உடல் வலிவும், உழைப்பு ஆற்றலும் நோக்கி வேலைகள் அளிக்கப்பட வேண்டும் வலிவுடன் உள்ள ஒருவர் மட்டுமே ஆற்றக்கூடிய வேலையை, வலிவற்ற—மெலிந்த ஒருவரிடம் ஒப்படைப்பது தவறாகும். வலிவுமிக்க ஒருவர் எட்டுமணி நேரம் தொடர்ந்து செவ்வனே நிறைவேற்றக் கூடிய ஒரு பணியை வலிவு குறைந்த ஒருவர் நான்கு மணி நேரம் தொடர்ந்து செய்யும் போதே களைத்துவிடுவது இயற்கை. அதன் பின்னர் அப்பணியை—அவர் கடமைக்காகத் தொடரினும்—அவர் உற்சாகமிழத்தலால் அப்பணியும் குறைபாடுடையதாக அமையலாம். நாளடைவில் அவர் மேலும் வலுவிழந்தவராக—நோயாளராக மாறுவார். தொடர்ச்சியில்—தொழில்திறன் குன்றும். உற்பத்தியும்கூடக் கெடும். நாடு வளம் இழக்கும்.

எனவே, தொழிலாளர் நோயுற்றால் நோய்க்கு மருந்தும், வேறு மருத்துவ உதவியும் எவ்வளவு இன்றியமையாதவையோ, அதே போன்று, அவர்கள் பணி சிறக்க—

அந்த வேலை—தொழில் அவரவர் உடல்நிலைக்கு ஏற்றதாக அமைய வழிகாண வேண்டும்,

தொழிலில் ஈடுபட்டுள்ள எவரும்—நோய் நீக்கத்துக்கு விபத்து இழப்புக்களுக்கு உதவியும் ஈடும் செய்யப்படுவதைப் போன்றே—

'உடல் வலிவு பாதுகாப்புக்கு ஆரோக்கிய நல்வாழ்வுக்கு—வகை செய்யப்பட வேண்டும்,

அவர்கள் உடல் வலிவு' இழக்கப்படாமல் காக்கப்பட வேண்டும்.

எல்லோருக்கும் உணவு
எல்லோருக்கும் உடை
எல்லோருக்கும் உறையுள்

என்னும் குறிக்கோள் நிறைவேற எல்லோருக்கும் வேலை வேண்டும்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' ஒருவருக்கு.

'வலிவுள்ள தொழிலாளரே நிறைவான செல்வம்' ஒரு நாட்டுக்கு.

அதற்கு—மருத்துவ உதவி மட்டுமன்றி—சத்துள்ள உணவுகிடைக்கவும்—வேலையும் நேரமும்—தொழிலாளியின் நிலைமைக்கு ஏற்ப அமையவும் — தொழிலாளிகள் — தமது தொழிலில் மகிழ்ச்சியும் ஊக்கமும் கொள்ளவும் வழிவகை செய்யப்பட வேண்டும்.

இந்த 'மே' திருநாள்—அந்த நினைவை அரசினருக்கு தோற்றுவிப்பதாகட்டும்!

---


## நடிப்பிசைப்புலவர் கே. ஆர். ஆர். அவர்களுக்கு

# தங்கப் பதக்கம்

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமிஎம்.எல்.சி. அவர்களுக்கு தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம் தங்கப்பதக்கம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. சங்கத்தின் சார்பாக தமிழகக் கவர்னர் மேதி அவர்கள் நடிப்பிசைப் புலவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கினார்.

தலைசிறந்த நாடக நடிகர் என்ற முறையில் கே. ஆர். ஆர். அவர்களுக்கு இந்தப் பதக்கம் வழங்கப்பட்டது.

நாடக உலகில் நல்ல மறுமலர்ச்சியை உண்டாக்கிய அறிஞர் அண்ணாவின் 'வேலைக்காரி', 'ஓர் இரவு', 'சந்திரமோகன்', நீதிதேவன் மயக்கம்' ஆகிய நாடகங்களை தமிழகமெங்கும் அரங்கேற்றி கலைத்துறையில் மறுமலர்ச்சிக்கருத்துக்களைப் பரப்பியவர் கே. ஆர். ஆர். அவர்கள்.



தி. மு. கழகத்தின் தோற்றத்திலிருந்து அதன் வளர்ச்சிக்காகப் பல துறையிலும் பங்கு கொண்டு வரும் கே. ஆர். ஆர். அவர்கள் கழகச் சார்பில் தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பணியாற்றிவருகிறார்.

கே. ஆர். ஆர். அவர்களுக்கு வழங்கப்பட்டச் சிறப்பு குறித்து பெரிதும் மகிழ்கிறோம் பூரிப்படைகிறோம்-அவரை மனமாரப் பாராட்டுகிறோம்.

நடிப்பிசைப் புலவரின் கலைத் துறைப்பணி மேலும் பல வெற்றி வாகைகளைச் சூடவேண்டுமென்று உளமார விழைகிறோம்.


○

---

# அறிஞர் அண்ணா

அவர்களின்

# மேதினச் செய்தி



விடுதலைக் கிளர்ச்சிகளிலும் உரிமைக் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டுள்ளோரும், பாட்டாளி மக்களின் வாழ்வு துலங்கவேண்டும், அவர் தமைச் சுரண்டிக் கொழுத்திடும் கொடுமை ஒழிக்கப்பட்டாக வேண்டும், என்பனவற்றிலே நாட்டம் கொண்டு பணியாற்றுவோரும் மேதினத்தைத் தமக்குரிய விழா நாளாகக் கொள்கின்றனர்.

மேதினம் மேதினி எங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

பேதமற்ற சுரண்டலற்ற சமுதாயத்தை, சமதர்ம அரசினைக் காண வேண்டுமென்ற பேரார்வம்கொண்டு அக்குறிக்கோளினை அடைந்திட நமக்குகந்ததோர் முறை

வகுத்துச் சென்றுகொண்டிருக்கும் தி. மு. க. மேதின விழாவன்று, மக்களிடம் சமதர்ம கொள்கைகளை வழங்கி மகிழ்கிறது.


மக்களாட்சியின் மாண்பு, பாட்டாளிச் சமுதாயம் உரிமை பெற்றாலொழிய பகற்கனவாகவே முடியும்.

அனைவரும் சமம் என்ற ஓசை நயத்தை வழங்கினால் மட்டும் போதாது, பாட்டாளி மக்கள் உண்மையான உரிமையும், நல்வாழ்வும் பெற்றாகவேண்டும்.

இது காண, தி. மு. க. தன் ஆற்றலைப் பயன்படுத்தி அறநெறி நின்று தொண்டாற்றி வருகிறது—மேலும் முயன்று இத்துறையில் பணியாற்றுவோம் என்று நாம் ஒவ்வொருவரும் இந்த மேதினத்தன்று சூளுரைத்து மகிழ்வோம்.

மலர்க சமதர்மம்!
மக்களாட்சி வெல்க!

அண்ணாதுரை



# கழகமே ஒரு தொழிலாளர் அணி

நாவலர் இரா. நெடுஞ்செழியன் M.A., M.L.A.

மேதினி எங்கும் ஆண்டுதோறும் கொண்டாடப்பெறும் மே நாள் விழாவை, இவ்வாண்டும் மிகச் சிறப்பான முறையில் கொண்டாட தி. மு. கழகம் முன்வந்துள்ளது. இவ்வாண்டு மே நாள் விழா பல வகைகளிலே சிறப்புடைய விழாவாகத் தி.மு.கழகத்தைப் பொறுத்த வரையில் அமைந்திருக்கிறது. காரணம், அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தல் தி.மு. கழகம் வெற்றிவாகை சூடி, வெற்றிக் களிப்போடு நாட்டில் நடைபோட்டு வருவதாகும்.

தி. மு. கழகம் ஏழை-எளிய-பாட்டாளி -- தொழிலாளர்கள் நிறைந்த அமைப்பு ஆகும். தி. மு. கழகமே ஒரு பொதுத்தொழிலாளர் அணி என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. மே நாள், தொழிலாளர் உரிமைகோரும் நாளாகவும், உரிமைக்காகப் போராடும் நாளாகவும், முயற்சியில் வெற்றி பெற்ற நாளாகவும் கருதப்படுகிறது. அந்தந்த நாட்டுத் தொழிலாளர்கள், தங்கள் தங்கள் நாட்டை பொறுத்தவரையில் பெறவேண்டிய உரிமைகளுக்காகப் பாடுபடும் நாளாக இந்த நாளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திராவிட நாட்டைப் பொறுத்த வரையில், தி.மு. கழகம் பாட்டாளி—தொழிலாளிகளின் நிலைவளரவும், வாழ்வு மலரவும், வளம் பெறவும், திராவிடநாடு விடுதலை பெறவேண்டும் என்ற உரிமைக்குரலை எழுப்பி வருகிறது. அந்த உரிமைக் குரலை எழுப்ப இவ்வாண்டும் மேநாள் விழா கழகத் தோழர்கள் ஆதரவாளர்கள் அனைவர்க்கும் பயன்படுவதாக !

கழகத் தோழர்கள் இந்த நல்ல நாளில், "ஊருக்கு ஊர், வட்டத்துக்கு வட்டம் கிளை அமைப்போம், தொழிலாளர் அணி உருவாக்குவோம்; தெருவுக்குத் தெரு கிளை அமைப்போம்; முக்குக்குமுக்கு கொடி நாட்டுவோம்; வீட்டுக்கு வீடு கழக வீரனைப் பெறுவோம்!" என்று திட்டமிட்டு, உறுதிமொழி எடுத்துக்கொண்டு பாடுபட முன் வருவார்களாக! வாழ்க திராவிடம்! வெல்க மே நாள் !



# நான் கண்ட அண்ணா

## அண்ணாவும் தொழிற்சங்கமும்

—[(*o*)]—


அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தான் முதலில் ஈடுபட்டார். தொழிலாளர்களின் நிலை உயரவேண்டும், அவர்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டும், தொழிற்சங்கம் வலுப் பெறவேண்டும் என்பதிலே தணியா ஆர்வங்கொண்டு 1934, 1935, 193 ஆண்டுகளில் பாடுபட்டார்.

அறிஞர் அண்ணாவைத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முக்கிய காரணமாக இருந்தவர் காலஞ்சென்ற தோழர் பாசுதேவ் ஆவார்கள் அண்ணா அவர்களின் வீட்டார், அண்ணாவை ஏதேனும் ஒரு அரசாங்க வேலையில் அமர்த்த வேண்டும் என்பதிலே ஆர்வங் காட்ட, அண்ணாவோ அரசியல் நடவடிக்கைகளிலேயே ஆர்வங் காட்டிவந்தார். தோழர்கள் பாசுதேவ், ஆல்பர்ட் ஜேசுதாசன் ஆகியவர்களோடுசேர்ந்து தொழிற்சங்க பணிபுரிந்துவந்தார். தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலமாக, அந்த நாட்களில், காங்கிரசிலே இருந்த தோழர் என். வி. நடராசனுக்கும் அண்ணாவுக்கும் தொடர்பு உண்டு; ஆனால் அரசியலில் இருவரும் எதிர் எதிர் கட்சியினர்.

தோழர் ஜம்னாதாஸ் மேத்தா தலைமையில், லக்ஷ்மணபுரியில், நடைபெற்ற அகிலஇந்திய தொழிற்சங்க காங்கிரஸ் மாநாட்டிற்கு அண்ணா அவர்கள் தோழர் ஆல்பர்ட் ஜேசுதாசன் போன்றவர்களோடு, பிரதிநிதியாகச் சென்றிருந்தாராம். சென்னைத் தலைவர்கள் மாநாட்டில் அண்ணாவுக்கு உரிய இடம் அளிக்காமல், தங்கள் பின்னால் ஓடிவரக்கூடிய 'ஆட்டுக்குட்டி'போல நடத்தினார்களாம். மாநாட்டுத் தலைவர்களிடம் அண்ணாவை அறிமுகம் செய்துவைப்பதையும் அவர்கள் ஒரு பொருட்டாகக் கருதவில்லையாம். மாநாட்டில் அண்ணா அவர்கள் ஒரு தீர்மானத்தின் மீது சிறிது நேரம் பேச வேண்டிய வாய்ப்பு கிடைத்ததாம். மாநாட்டினர் அண்ணா அவர்களின் பேச்சில் ஒன்றித், திளைத்து, மகிழ்ச்சி, தணியாப் பற்றுக் கொண்டுவிட்டனராம். பிறகு மாநாடு முடியும்வரையில் தலைவர்கள் அண்ணாவைக் கண்டு பேச விரும்புவதும், தொண்டர்கள் அண்ணாவின் பின் ஓடுவதும் ஆன காட்சிகள், மற்ற சென்னைத் தலைவர்களை இருந்த இடம் தெரியாமல் மறக்கடித்துவிட்டனவாம். மாநாட்டின் விஷயாலோசனைக் குழுக் கூட்டத்தில் அண்ணா அவர்களின் கூற்றுக்கு நல்ல மதிப்பும், செல்வாக்கும் இருந்தனவாம். அந்த மாநாட்டில்தான் அண்ணா அவர்கள் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொழிற்சங்க காங்கிரசில் ஈடுபட்டிருந்த அறிஞர் அண்ணா அவர்களை நேரடி அரசியல் கட்சியில் ஈடுபடும்படி செய்தவர், தோழர் 'சண்டே அப்ஸர்வர்' பி. பால சுப்பிரமணியம் ஆவார்கள்.

-நாவலர்




கவிஞர் வாணிதாசன்

காற்றினில் மழையில் வானக்
காரிடி வீச்சில் கோடை
ஆற்ருணு வெயிலில் நின்றே
அவரிவர் எனப்பா ராது
மாற்றார்க்கும் காலங் காட்டும்
மணிக்கூண்டே உன்னைப் போல
நூற்றிலே ஒருவ ரேனும்
மக்களில் நுவலப் போமோ?

ஈன்றவள் பிள்ளை காத்தே
இருப்பினும் சிறிது போழ்து
தோன்ருவாள் இமையை மூடித்
துயன்றுபின் எழுவாள் ; நீயோ
ஈன்றவள் தனக்கும் தாயாய்
இமைநொடி மூடல் இன்றி
ஆன்றதை விளக்கி ஊக்கும்
அணிநகர்க்(கு) அன்னை ஆனாய்.

வீட்டினில் அறிவு மிக்க
மாமியார் இருந்தால் அந்த
வீட்டினில் ஒழுங்கு நேர்மை
மிகுந்திடும் என்பார் மேலோர்
கூட்டினில் இருந்து கொண்டே
ஒவ்வொரு குடும்பம் ஊக்கி
ஆட்டிடும் பெரிய மாமி
மணிக்கூண்டே ஆனாய் ; வாழி!

உழைப்பினைப் பொதுமை ஆக்கி
உருப்பெறும் விளைவை எல்லாம்
பிழைப்பவர் பகிர்ந்து துய்க்கப்
பேணிதல் பொதுமை! ஆனால்
உழைப்பின விளைவை எல்லாம்
மணிக்கூண்டே உனக் கெண்ணாமல்
அழைத்துவாழ் மக்கட் கீயும்
அருஞ்செயற் கீடும் உண்டோ?

# உழைப்போர் உரிமை வெல்க!

தொழிற்சங்கச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி

உலகத்திற்குப் பொதுவான ஒப்பற்றதோர் திருநாள் உண்டென்ருல், அது மே நாள் ஒன்றுதான்,

வறுமையால் வாடுவோர், தேவைகளால் திகைப்போர், மனிதனுகப் பிறந்தும் மனிதனுக்குரிய மரியாதையின்றி உழல்வோர் ஆகிய பகுதியினர் உலகத்தின் எந்தமூலையிலிருந்தாலும்—எந்தகைய சூழ்நிலையில் வாழ்ந்தாலும் — ஒருசேர நினைத்து உலகத்தைப் பற்றிய கவலை எடுத்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பு அளிப்பது இந்தத் திருநாள் ஒன்றுதான்.

வெயிலெரிக்கும் தமிழகத்துத் தெருக்களில் கால்கடுக்க மெள்ள நடந்து குப்பை கூட்டும் நகரசுத்தித் தொழிலாளியானுலும் அல்லது குளிர்சாதனக் கொட்டகையில் சுத்தியலுடன் இயந்திரத்தில் தலைகவிழ்த்துத் தொழில்பார்க்கும் ஐரோப்பியத் தொழிலாளியானுலும் இருவரும் ஒரேகுலம். ஒரேஅபிலாஷை கொண்டோர், எதிர்கால உலகம் எப்படி இருத்தல்வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்துபடைத்தோராக அவரவர்களை இணைக்கும் பாலமாக திகழ்வது மேநாள் ஒன்றுதான்.

வறுமையும், இல்லாமையும் நிறைந்துள்ள உலகத்தைச் சொர்க்கபூமியாக்க இன்றைய உலகம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பது வேறு விஷயம். ஆனுல், தன்னை மனிதன் என்று உணர்வதற்கும், மனிதனுக்குரிய அடிப்படை—பிறவி உரிமைகளைப் போராடிப் பெறுவதற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் இந்த நாட்டில் முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது : சத்தியப் பரிசோதனையில் இறங்கியிருக்கிறது.


உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் உள்ளக்குமுறலையும் அவர்களது போராட்ட உணர்வுகளையும் தெள்ளத் தெளிவாக— உள்ளதை உள்ளபடி—இந்த நாட்டில் எதிரொலித்தது தி. மு. கழகப் பாரம்பரியமே ஆகும், அரசியல்—சமுதாயத் துறைகளில் கழகம் ஏற்படுத்தியிருக்கும் விழிப்பு உணர்ச்சிகள், தொழிலாளர் துறையிலும் மிகச்சிறப்பாக வெளிப்படத் தொடங்கியதைக் காணும் கழகத் தோழர் எவரும் பேருவகை கொள்ள நியாயமுண்டு. இருந்தும், தொழிலாளர் உரிமைகளுக்கென அணிவகுப்பதிலும், தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபாடு கொள்வதிலும் கழகம் நெடுநாள் ஒதுங்கியே இருந்திருக்கிறது. கழகத்தின உயிர்க் கொள்கையான திராவிட நாட்டு விடுதலையில் அதன் தொழிலாளிவர்க்கத்தின் விடுதலையும் நல்வாழ்வும் அடங்கியிருப்பதாகவே அது கருதுகிறது; தென்னகத்து மக்கள் உள்ளங்களில் ஆண்டாண்டு காலமாக மெள்ள மெள்ள ஊட்டப்பட்டுள்ள அடிமை மனப்பான்மையை உடைத்தெறிந்தால், நாட்டின் இல்லாமையும் போதாமையும் வாழ்க்கைத் தொல்லைகளும் ஒருசேர ஒழிந்துபோகும் எனக் கழகம் கருதுகிறது.

இந்தப் பலமான கருத்தின் அடிப்படையில் தான் தொழிலாளர் மேம்பாட்டுக்கான தனியானதோர் பணித்துறையை உண்டாக்கிக் கொண்டு செயல்பட, நெடுநாட்களாகக் கழகம் கருதவில்லை.

ஆனுல், ஆட்சியின் அராஜகமும் தொழில் முதலாளிகளின் நயவஞ்சகமும் கழகத்தின் கவனத்தை இந்தத் திசையிலும் திருப்பின. ஆட்சிபீடமே மோசமானதோர் முதலாளியைக் காட்டிலும் அதிகக் கொடுமையுடன் பல்வேறுசந்தர்ப்பங்களில் தொழிலாளர் உரிமைகளை நசுக்கத் தலைப்பட்டபோதும், பேராசைப் பிடித்த முதலாளிகளுக்குப் பக்கபலமாக ஆளுங்கட்சியே வரிந்து கட்டி நின்றதைப்பார்த்ததும், கழகத்தின் விடுதலைப் போராட்டத்தின் ஓர் அரங்கமாக தொழிற்சங்கப்பணிகளையும் சீராக்கிச் செயல்படக் கழகம் முனைந்தது,

இதன் காரணமாகவே கழகத்தின் பல்வேறு செயலாளர்களுடன் தொழிற் சங்கத்திற்கென ஓர் செயலாளர் சட்டதிட்டப்படியே நிர்ணயிக்கப்பட்டிருக்கிருர்.

கூலி உயர்வுக்காகவும், மற்ற பகுதிகளின் தொழிலாளர்களைப் போலவே வேண்டிய வசதிகளைச் செய்து தருமாறும் தொழிலாளிகளையும் அரசாங்கத்தையும் கேட்டுப்



போராடும் உணர்ச்சி, இந்த நாட்டுத் தொழிலாளர் வர்க்கத்திற்குப் பழமையானதுதான். ஆனுல், தொழிற்சங்கப்பணிகளிலும். தொழிலாளர் நலம் பேணுதலிலும் கழகம் ஈடுபடத் துவங்கியதும், நாட்டுத் தொழிலாளர் வர்க்கத்தினிடையே புதுமை மனப்பான்மை ஊடுருவத் தொடங்கியிருக்கிறது. தொழிலாளர் வாழ்க்கைத் தேவைகளைப் போதுமான அளவுக்குநிறைவேற்றி வைப்பதுமட்டும் கழகத் தொழிற் சங்கப் பகுதியின் பணியாக இல்லை. அவைகளுக்கும் மேலாக, தொழிலாளர் என்ருல், அரசாங்கத்தின் சட்டங்களையும் முதலாளிகளின் பரந்த மனப்பான்மையையும் மட்டுமே நம்பி வாழும் வர்க்கமாக இருக்கக்கூடாது, அது பிரிக்க முடியாத யாரும் மறுக்கக்கூடாத பிறவி உரிமைகளையும் படைத்த வர்க்கம். 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று பாடிய பாரதி மனிதனை முன்னிறுத்தியே பாடினுன். ''தொழிலாளி'' என்பதற்கு முன்னுல் ''மனிதன்'' என்டதையே கழகக் முன்னிறுத்திப் பார்க்கிறது. இதன் அடிப்படையில், கிடைக்கும் இலாபத்தில் அதனைச் சம்பாதிப்பதில் டங்குபெற்ற எல்லா தொழிலாளர்களுக்கும் பங்கு இருக்க வேண்டும் என்பதே கழகத்தின் இறுதிக் குறிக்கோள். இந்த குறிக்கோளை செயல்படுத்த எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்ளக் கழகம் துவங்கியிருக்கிறது.

கழகத்தின் இத்தகைய புனித குறிக்கோள் நிறைவேறுவதற்கு எப்போதும் உறுதுணையாகஇருப்போம் என, மே நாளான இந்த புனித நாளில் எல்லா தொழிலாளர் தோழர்களும் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதே என்னுடைய பணிவன்பானவேண்டுகோளாகும்.

அடக்குமுறைச் சட்டங்களைக் காட்டியும், ''உள்நாட்டுப்போர்'' எனும் பூச்சாண்டி காட்டியும் விடுதலை உணர்வை அழித்துவிடலாம் என்று நினைக்கும் இன்றைய ஆட்சியாளர்களுக்கு. ஆண்டுதோறும் வருகின்ற இந்த மே நாள் பெரியதோர் அறைகூவலாகும், மனித இரத்தத்தைச் சிந்தி கொண்ட உறுதியை நிலைநாட்டிய இந்தப் பொன்னுளின் சரித்திரப்பின்னணி, தொழிலாளர் வர்க்கத்திற்கு மட்டுமல்ல கழகத்தின் விடுதலைப்பணிக்கும் பேராக்கமும் பேருக்கமும் அளிப்பதாகும்.

வாழ்க மே நாள்.

வெல்க உறுதி.

வழக்கறிஞர்

**தில்லைவில்லாளன்**

எம்,எ.,பி·எல்.

வழங்கும் இலக்கிய விருந்துகள்

*

| | | |
|---|---|---|
| பட்ட மரம் | ... | 1—50 |
| திரை | ... | 1—00 |
| காதல் சக்கரம் | | (அச்சில்) |
| ஆரியர் யார்? திராவிடர் யார்? | | ,, |
| மழலை செல்வம் | | ,, |

விபரங்கட்கு :-

தம்பி வெளியீடுகள்

72/73, கடைத்தெரு, சிதம்பரம்.

## எழுத்தாளர்கள்!

நாம் வாழ்கின்ற உலகமே—புலியையும் — ஆட்டையும், எலியையும் பூனையையும் உண்டாக்கியதாகத்தான் இருக்கிறது.!

பூனை உலவும் வீட்டில்தான், எலி பேரப்பிள்ளைகளுடன் குடும்பம் நடத்துகிறது.!

ஆகவே, ஒரு கருத்தைக்கொண்டிருப்பவர்கள், மாற்றுக் கருத்தைக் கொண்டிருப்பவர்களைக் கண்டு அஞ்சினுல், அவர்களது கருத்து வலிவைக் காட்டுவதாகாது—அது அறிவுடைமையும் ஆகாது.

புரட்சிக்கு முன்னர் ரஷ்யாவில் ஒரு நூல் எழுதப்பட்டது; அந்நூல் சீமான்களின் கொடுமையைச் சித்தரிப்பதாகும். அந்தநூல் அச்சாகவில்லை. அப்பொழுதிருந்த அரசு அந்நூலைத் தடுத்துவிட்டது, பிறகு அந்நூல் கையெழுத்துப் படிவமாகச் செய்யப்பட்டு, வீடுகள்தோறும் படிக்கப்பட்டது. சீமான் வீட்டு சமையல்காரன ,அடுப்படியில்ஓய்வு நேரத்தில், கையேடாக அந்நூலைப் படித்தான்? பிரபுவின் வண்டிக்காரன் படித்தான், இப்படி நாடெங்கும் ரகசியமாகப் படிக்கப்பட்டது.

அந்நூலுக்கு நாற்பது ஆண்டுக்காலம் தடை விதிக்கப்பட்டது, புரட்சிக்குப் பின் ஏற்பட்ட அரசு அந்நூல் மீதிருந்த தடையை நீக்கியது. 'தடை செய்யப்பட்ட நூல் அச்சாக்கப்பட்டுள்ளது' என்று விளம்பரம் கூடச் செய்யப்பட்டது. ஆனுல் அப்பொழுது அந்நூலை வாங்குவார்இல்லை.காரணம்,அந்த அளவுக்கு அந்நூல் நாட்டு மக்களால் படிக்கப்பட்டு விட்டது.

இதை நான் எடுத்துக் கூறுவதற்குக் காரணம், நாட்டில் சில எழுத்தாளர்களின் படைப்பைத் தடுத்துவிட்டால், அதன் காரணமாக அக்கருத்து மறைக்கப்புட்டு விடும் என்று கருதுவது தவருகும் என்பதற்காகத்தான். எழுத்துக்கள் தாராளமாக நடமாட வேண்டும் அவைகளைத் தடுக்கக்கூடாது.

ஆகவே, எழுத்தாளர்கள் கண் விழிப்பாக இருந்து. ஆட்சியாளர்கள் எழுத்தின் மீது தடை விதித்தால்—தடை யார்மீது என்று கருதாது-எதிர்த்து முறியடிக்க வேண்டும்,

இதற்கு தைரியம் அவர்களுக்கு ஏற்பட வேண்டுமென்ருல், அவர்களை வறுமை கொட்டக்கூடாது. அப்படிப்பட்ட நிலைமை உருவாக வேண்டுமானுல் மீண்டும் பழைய பிரச்சினைக்குத்தான் திரும்ப வேண்டும்,

அதிகப் பிரதிகள் விற்பனையாகும் காரணத்தால் ஒருவரைப் பெரிய எழுத்தாளர் எனறும், குறைவான பிரதி விற்பனையாவதால் அவரைச் சிறிய எழுத்தாளர் என்றும் கருதக்கூடாது,

வங்காளத்தைச் சேர்ந்த பங்கிம் சந்திரர் பெரிய நாவல் எழுத்தாளர் இரவிந்திரர் உலகம் புகழும் எழுத்தாளர். ஒருமுறை, ஒருவர் பங்கிம் சந்திரரிடம் சென்று, 'தாகூர் சிறந்த எழுத்தாளர், உலகம் பாராட்டும் புகழ் பெற்றவர் என்று கூறப்படுகிறது. ஆனுல் அவர் எழுதிய நூல்கள்—நீங்கள் எழுதிய நூல்கள் மிகவும் விற்பனையாவது போல் — விற்பனையாவது இல்லை. இரவீந்திரர் எழுதிய நூல்கள் மிகக் குறைவான பிரதிகளே விற்பனையாவது ஏன்?' என்று கேட்டார், அதற்குப் பங்கிம் சந்திரர், 'நான் எழுதும் நூல்களெல்லாம் உங்களுக்காக எழுதுவதாகும் ஆனுல், தாகூர் "எழுதும் நூல்களெல்லாம் எங்களைப் போன்றவர்களுக்காக எழுதுவதாகும்' என்ருர்.

அப்படிப்பட்ட மனப்பக்குவம் நம்மில் எத்தனைபேருக்கு இருக்கிறது. என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்! இப்படிப் பட்ட மனநிலை நம்மிடையே வளரவேண்டும்!

-அண்ணு

# எதிர்க்கட்சியினர் எண்ணத்திற்கு...!

மூன்றுவது பொதுத்தேர்தல் முடிந்த பிறகு தி. மு. கழகம் பெற்றுள்ள வளர்ச்சிபற்றி 'அமெரிக்கா' விலிருந்து வருகிற 'கார்டியன்' என்கிற ஆங்கில ஏடு 'CongressHome' என்ற தலைப்பில் அடியிற்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளது.

அக்கட்டுரையில் முன்பகுதியில் இந்தியாவில் சரியான எதிர்க்கட்சி தோன்றவில்லை என்று குறிப்பிட்டுவிட்டு, ஆனால் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு உணர்ச்சி வளர்ந்து வருகிறது என்றும், இதனால்தான்—இந்த உள் கசப்புதான் பல இடங்களில் காங்கிரஸ் தோல்விக்குக் காரணமாகும் என்றும் எழுதிவிட்டு, "ஆனால் சென்னையைப் பொறுத்த மட்டில் காங்கிரசின் தோல்விக்கு மேற்கண்ட காரணங்களைக் கூற முடியாது. ஏனென்றால் இங்குதான் திறமையான முறையில் ஆட்சி நடந்து வருகிறது. என்றாலும் தி. மு. கழகம் (திராவிடத் தேசீய இயக்கத்தினர்—பிரிவினைக் கட்சியினர்) பல இடங்களைக் கைப்பற்றியுள்ளனர்"—என்று குறிப்பிட்டுள்ளது.

இக்கூற்றை எதிர்க்கட்சியினர்களைக் கவனித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

வடக்கே பல இடங்களிலும், தென்னகத்தின் சில மாநிலங்களிலும் ஓரளவு எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன என்றால் இதற்குக் காரணம் காங்கிரஸ் கட்சியினர்களுக்கிடையே ஏற்பட்ட பதவி பிடிச் சண்டை, கோஷ்டி மனப்பான்மை, குரோதத்தன்மைபோன்றவைகளால்தான் என்று அந்த ஏடு கூறுகிறது. ஆனால் தமிழகத்தில் தி. மு. க. பெற்ற வெற்றி அப்படிப்பட்ட குறைபாட்டினால் ஏற்பட்டதல்ல! இது கட்சியின் வளர்ச்சியையே காட்டுகிறது என்பதாகப் படம் பிடித்துக் காட்டுகிறது 'கார்டியன்'

"இந்தியாவில் அழகாக ஆட்சி செய்யப்படும் மாநிலம் தமிழகமே" என்பதாகக் காங்கிரஸ் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது. அந்த முறையில் காமராஜர் 'சபாஷ்' பட்டத்தை 'டெல்லி'யிடமிருந்து பெற்றிருக்கிறார்!

காரணம் காமராஜர் ஆட்சிக்கு வந்தபின் தமிழகத்து அரசியலில் ஒரு அமைதி—பேரமைதி நிலவியதுதான், இதை யாரும் மறுக்கமுடியாது.

காமராஜர் காலத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் வேற்றுமை வெளிக்கிளம்பியது இல்லை! காமராஜர் கண்ஜாடைக்குக் கட்டுப்பட்ட நிலைமை! எந்தவிதமான பதவிச்சண்டையோ, குடுமிபிடிச்சண்டையோ, குரோதமோ காங்கிரஸ் கட்சியிலே பார்க்கமுடியாத நிலை!

இன்னும் சொல்லப்போனால் எதிர்க்கட்சிகள்கூட சண்டப் பிரசங்கங்கள் செய்தது கிடையாது. சாதாரணமான நிலைமையிலே பிரச்சாரங்கள் நடைபெற்றுவந்தன.

பொதுமக்கள் மத்தியில் காமராசர் இருக்கும்வரை காங்கிரஸ் கரையாது—அசையாது என்று நம்பும் நிலை எதுவகையிலும் ஒரு தேக்க நிலை இருந்துதான் வந்தது.

இந்த மந்த நிலைமையில்தான் நடந்துமுடிந்த தேர்தலில் தி. மு. கழகம் 50 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. டில்லிப் பாராளுமன்றத்திற்கு 7 பேர்களை அனுப்பியுள்ளது. அறிஞர் அண்ணா அவர்கள் டில்லி மேலவையில் இடம் பெற்றார்கள்!

இந்தியாவில் நன்றாக—செம்மையாக ஆட்சி நடக்கும் தமிழகத்திலே தி. மு. க. வெற்றிப் பரணி! அரசியல் அமைதியை நிலைநாட்டிய காமராஜர் ஆட்சியிலே தி. மு. க. வெற்றி! காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுகள் இல்லாமல் கட்டிக்காத்து வரும் காமராஜர் ஆட்சியிலே தி. மு. க. வெற்றிப் புன்னகை!

இது எதனால்? இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? தி. மு. க. வின் கொள்கை வளர்ச்சி என்பதைத் தவிர வேறு என்ன என்று கூறமுடியும்.

இது மட்டுமல்ல! கழகத்தின் கடந்த இரண்டு ஆண்டுகால நிகழ்ச்சிகளை எண்ணிப்பாருங்கள்! எவ்வளவு அவலட்சணமாக்கப்பட்டன—குட்டிக் காங்கிரஸ் கட்சித் தலைவரால்!

அடேயப்பா! அவர் செய்த சண்டப்பிரசண்டம் என்ன? தலைவர்களைத் தாறுமாறாகத் திட்டினார்! கொள்கை தவறு என்றார்! திராவிடம் மாயை' என்றார். 'ஆசாபாசம் கொள்ளலாமா' என்று அங்கலாய்த்தார்! தலைவர்களின் தவறுகள் இதோ எனறார்!

ஒவ்வொரு நாளும் தினத்தாள்களில் அவரது பேச்சுக்குத்தான் முதலிடம்! அவரின் படம் பெரியதாகப் போடப்படும். பத்திரிகை பார்ப்பதற்கே கூச்சப்படும் நிலை—கழகத்தோழர்களுக்கு, தினந்தினம் ஆராதனைகள் — அர்ச்சனைகள்!

காங்கிரஸ் நாளிதழ்கள் கிடைத்தது சந்தர்ப்பம் என்று இல்லாததும் பொல்லாததும் வெளியிட்டன! பக்கத்துக்குப் பக்கம் அவர் விலகினார் இவர் விலகினார் என்னும் செய்திகள்!

வேதனை உள்ளத்தோடு கழகத் தோழர்கள் உலவிய காலை அவர்கள் விலாநோகச் சிரித்தனர்!

தி. மு. க. இத்துடன் அழிந்துவிட்டது.

தூண் சரிந்துவிட்டது தொலைந்தார்கள்!

கோட்டைக்குள்ளே குத்து வெட்டு!

ராயபுரத்துச் சிறுவர்களின் அரசியல் அப்பாவித்தனம் பாரீர்!

இனித் தலைதூக்கமுடியாது!

தலைநீட்ட நேர்மை இல்லை!

இப்படியும், இதற்கு மேலேயும் காங்கிரஸ் ஏடுகள் கயிறு திரித்து எழுதின! தினம்தினம் இப்படித்தான் சம்பவங்கள் நடப்பதாக வெளியிட்டுவந்தன!

'ஆனந்தவிகடன்' 'சம்பத் மாறிவிட்டார்' என்று அண்ணா பாடுவதாக கார்ட்டூன் போட்டுக் காட்டியது. கழகத்தைத் தலைவேறு முண்டம் வேறாகப் பிடித்து இழுத்துக்கொண்டு போவதுபோல் 'கேலி செய்தன ஏடுகள், கழகத்திற்குள் நடக்கும் போராட்டம் மதவாதிகள்—புரட்சிவாதிகள் என்ற பாகுபாட்டினால்தான் என்று கூறியது 'லிங்க்' ஏடு! இப்படி வாய்க்கு வந்ததெல்லாம் எழுதின ஏடுகள்!'

**ச. வெ. பாண்டியன்** பி.ஏ.

இந்தக் கொள்ளையில் 'புதிய தேசீயத்தார்' உண்ணாவிரத நாடகம் ஆரம்பித்தார். எவ்வளவு பரபரப்பை ஊட்டியது நாட்டில்!

இரண்டு ஆண்டுகாலமாகக் கழகத்திற்குக் காட்டப்பட்ட இழிவு—களங்கம் நினைத்துக்கூட பார்க்க முடியாதது! இவ்வளவு நெருக்கடிகளுக்கும் கழகம் அசைந்துகொடுத்தது. தங்கமானது அடித்துத் துவைத்துத் தள்ளினாலும் அதன் ஒளி மாறாது இருப்பதுபோல நமது கழகமும் இவ்வளவுதுவளல்களுக்கிடையில் தன் பிரயாணத்தை நடத்திக் கொண்டிருந்தது.

காமராஜர், கழகம் தொலைந்தது! ஒரு சீட்டுக்கூட கிடைக்காது என்றார்!

கனம் சுப்பிரமணியம், தி. மு. க. இனி வெற்றி பெறாது என்றார்.

சென்னையில் 10 இடங்களும் காங்கிரசுக்குத்தான். இப்போதே வெற்றிவிழாக் கொண்டாடலாம் என்று காமராஜர் உற்சாகமாகப் பேசினார்!

ஆத்திரப்பட்ட நேருவிடம் 'ஐய்யோ இவர்களுக்காகவா இப்படிப் பேசிவிட்டீர்கள்! இவர்களின் கணக்கு தேர்தலோடு சரி' என்றார் காமராசர்! அலட்சியம் அப்படி இப்படிப்பட்டதா காமராசர்—சுப்பிரமணியங்களுக்கு!

நடந்தது என்ன? 50 தி. மு க. வினர் வெற்றிவாகை சூடினர்! 34 இலட்சம் வாக்குகள் தி.மு.க.-விற்குக் கிடைத்தன!

வந்தாலும் 15 சட்டசபை உறுப்பினர்கள்தான்வருவார்கள்.,எனவே அவர்களைத் தொலைத்தால் போதும் என்று முன்னரே திட்டம்போட்டு பல சதிகளைப் பயன்படுத்தி—பணத்தை அள்ளிவீசி அதில் ஓரளவு வெற்றியும் கண்ட காமராசருக்கு தி. மு. க.-வின் இந்த வெற்றி இடுப்பை வளையச் செய்தது. வாயை மூடச் செய்தது.

தி. மு. க.-விற்குக் கிடைத்த வெற்றி மிகச் சாமான்யமானதா? என்று எண்ணிப்பாருங்கள்!

பல இக்கட்டான நிலைகளுக்குப் பின்னால் கழகம் 50 இடங்களைப் பெற்றுள்ளது என்றால் இது சாமான்ய வெற்றியா? 34 லட்சம் வாக்குகள் கிடைத்தது என்றால் இது என்ன சுலபமானதா? 17 லட்சம் 34 லட்சமாகவன்றோ ஆகியிருக்கிறது. 15 இடங்கள் 50 இடங்களாகவன்றோ மாறியிருக்கிறது.

34 லட்சம் ஓட்டுகளும் திராவிட நாடு கொள்கைக்குக் கிடைத்த ஓட்டு அல்ல!

தி. மு. க.வினர் 'லீக்'கோடு சேர்ந்தார்கள், 'சுதந்திராவோடு' பேரம் பேசினார்கள் என்றெல்லாம் பேசுவோர்கள் இதை ஏன் எண்ணிப்பார்க்க மறுக்கிறார்கள். கடந்த காலச் சிந்தனை ஏன் அவர்களுக்கு வர மறுக்கிறது!

மனதைத் திறந்து—கண்களைத் திறந்து சிந்தியுங்கள்! குறைத்து மதிப்பிடாதீர்கள் — உங்களுக்குக் கிடைத்த தோல்வியால். அது உங்களுக்கே தோல்விவாகும்.

எதிர்க்கட்சியினர்கள் சிந்திப்பார்களாக!


தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

**வெண்சங்கு சீயக்காய்த் தூள்**

எங்கும் கிடைக்கும்

மனத்தில் மிகுந்த

**செல்வம் ராணி ஊதுபத்திகளை**

உபயோகியுங்கள்



தயாரிப்பாளர்:

**வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி**

3037—38 டபீர் குளம் ரோடு-தஞ்சை

# பள்ளிக்கூடப் பிள்ளைகள் அல்ல-பாராளவந்த அமைச்சர்கள்!

# விலையைக் குறைக்க முடியாதவர்கள் விலகட்டும் பதவியிலிருந்து!

## ஆட்சியாளருக்கு அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரை

காங்கிரசுக்காரர்கள் நல்ல யூகமுள்ள அரசியல்வாதிகளானால் 'முப்பத்து நான்கு இலட்சம் மக்கள் நம்மை எதிர்த்து முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்தார்களே—ஏன், வாக்களித்தார்கள் ?' என்பதைப்பற்றி சிந்திக்கவேண்டும்.

முப்பத்து நான்கு இலட்சம் வாக்குகளை இன்றைய தினம் ஒரு எதிர்கட்சியிலே உள்ள முன்னேற்றக் கழகத்தவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்றால், இந்த முப்பத்து நான்கு இலட்சம் மக்களும், 'இன்று காங்கிரசு ஆட்சியை நம்பவில்லை—காங்கிரசு ஆட்சியிலே விலை குறையாது—காங்கிரசு ஆட்சியினாலே வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியாது—காங்கிரசு ஆட்சியினாலே ஏழைக்கு வாழ்வு கிடைக்காது' — என்று தெரிவித்துதான் உங்களுக்கு ஓட்டுப் போடாமல் கோ. சி. மணிக்குப் போட்டார்கள்; துரையரசனை வெற்றி பெறச் செய்தார்கள் ; கருணாநிதியைத் தேர்ந்தெடுத்தார்கள்; நாவலரை வரவழைத்துக் கொண்டார்கள்—என்பதுதானே பொருள் !

அப்படிப்பட்ட வகையிலே '34 இலட்சம் மக்கள் நம்மிடத்திலே நம்பிக்கை இல்லைஎன்று தெரிவித்திருக்கிறார்களே' என்பதைப் பொறுப்புணர்ச்சியோடு—நாட்டை ஆளுகிற முதலமைச்சர் உட்கார்ந்து சிந்தித்து, பிறகு மக்களைப் பார்த்து, 'என்னமோ, உங்களில் முப்பத்தி நான்கு இலட்சம்பேர் எங்களுக்கு வாக்களிக்கவில்லை ; எங்களிடத்திலே உங்களுக்கு இருக்கிற அதிருப்தியை நாங்கள் உணருகிறோம் ; இனி உங்கள் திருப்தியைப் பெறத்தக்கவகையில் நாங்கள் ஆட்சியை நடத்துவோம் ; விலையைக் குறைப்போம்'—என்று பேசவேண்டியதிருக்க, 'இவர்கள் எப்படி வெற்றி பெற்றார்கள் தெரியுமா ? பணக்காரர்களாக இருப்பதாலேயே இவர்கள் வெற்றிபெற்றார்கள்' என்று ஒரு இடத்திலேயும், 'ஏழைகளாக இருப்பதாலே இவர்கள் வெற்றி பெற்றார்கள்' என்று இன்னொரு இடத்திலேயும், 'படித்தவர்களாக இருப்பதாலே வெற்றி பெற்றார்கள்' என்று இன்னொரு இடத்திலேயும், 'பாமரர்களாக இருப்பதாலே வெற்றிபெற்றார்கள்' என்று இன்னொரு இடத்திலேயும்—நாளுக்கு ஒரு ஆராய்ச்சி—வேளைக்கு ஒரு ஆராய்ச்சி — மந்திரிக்கு மந்திரி ஆராய்ச்சியிலே முரண்பாடுகள் என்ற விதத்திலே இருக்கிறார்களே தவிர, வேறு எந்தவிதத்திலே இருக்கிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள்.

விளையாட்டுச் சிறுவர்கள் இரயிலிலே ஏறிக்கொண்டு போனால் இரயிலினுடைய சப்தத்தை அவர்களாகவே யூகிப்பார்கள். ஒரு சிறுவன் சொல்லுவான்—"இந்த இரயிலினுடைய சப்தத்தைக் கேட்டவுடனே, 'வந்துவிட்டேன், வந்துவிட்டேன்' என்று சொல்லுகிறது பார்" என்பான்; பக்கத்தில் இருக்கும் இன்னொரு பையன், 'வந்துவிட்டேன் என்று சொல்லவில்லை போய்விட்டேன் என்று சொல்லுகிறது பார்' என்று சொல்லுவான். அதை எண்ணிக்கொண்டே உட்கார்ந்தால் அந்தச் சப்தம் அப்படியே காதில் கேட்கும்.

அந்தப் பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் இரயிலிலே ஏறிக்கொண்டு நடத்துகிற ஆராய்ச்சியைப்போல் 'மந்திரி பதவியிலே இருந்துகொண்டு இந்த பெரிய பிள்ளைகள் இந்த ஆராய்ச்சியா நடத்தவேண்டும்?' என்று நானல்ல—வெளியுலகத்திலே உள்ளவர்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள் !

ஆகையினால் புதிதாக மறுபடியும் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் காங்கிரசு ஆட்சியாளரை நான் கேட்க ஆசைப்படுகிறேன் — 'உங்களுடைய எதிர்காலத் திட்டமென்ன?' எங்களைப் பார்த்துக் கேட்கிறீர்களே — நாங்கள் ஆளும் கட்சி அல்ல—எங்களுடைய திட்டம் என்னவென்றால் — நீங்கள் நல்லது செய்தால் ஆதரிப்பது; நீங்கள் கெடுதல் செய்தால் தடுத்து நிறுத்துவது, நீங்கள் நல்லதுக்கு அழைத்தால் ஒத்துழைப்பது — நீங்கள் கோணல் வழியிலே சென்றால் தடுத்து நிறுத்துவதுதான்.

இது எங்களுக்கு மட்டுமல்ல — எந்த எதிர்க்கட்சியாக இருந்தாலும் அந்த எதிர்க்கட்சிக்கு இருக்கிற இலக்கணம், கடமை அதுதான்' அந்தக் கடமையை நாங்கள் செம்மையாக நிறைவேற்றுவோம்.

ஆளுங் கட்சியாக இருக்கிற காங்கிரசே; உன்னை நான் கேட்கிறேன் — காங்கிரசுத் தலைவர்களை நான் கேட்கிறேன் — 'நான் ஒரு குடிமகன்; நான் ஒரு வாக்காளன்; நான் ஒரு வரி செலுத்துபவன்' என்ற முறையிலே கேட்கிறேன் —' மூன்றாவது முறையாக அரசு அமைத்திருக்கும் காங்கிரஸ்கட்சி என்ன திட்டத்தை இதுவரையிலே மக்களிடத்திலே சொல்லியிருக்கிறது" என்று

ஆனால், சொல்லியிருக்கிற திட்டமெல்லாம், 'அண்ணாத்துரையை ஒழித்துக் கட்டுகிறேன் பார்; முன்னேற்றக் கழகத்தை முறியடிக்கிறேன் பார்'... என்ற இப்படிப்பட்டவைதானே !

'விலையைக் குறைக்கிறோம் ; வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைத்துக்காட்டுகிறோம் ; தொழில் வளத்தைப் பெருக்கிக் காட்டுகிறோம்' என்ற இந்தத் திட்டங்களை அவர்கள் எடுத்துச் சொல்லாமல் இதுவரையிலே இருப்பதற்குக் காரணம் என்ன ?

இன்னும் சில நாட்களில் சட்டமன்றம் கூடுகிறபொழுது, புதிதாக வரிபோடத் திட்டமிட்டிருக்கிறார்கள்: அந்த புதிய வரிகள் ஏழை மக்களின் தலையிலே விழப்போகின்றன; அந்த வரியினாலே ஏழை திண்டாடுவான் — திகைப்பான் — திணறுவான்— எதிர்ப்பான்—என்ற காரணத்தினாலே அவனுடைய கவனத்தைத் திருப்புவதற்காக, 'அண்ணாதுரையைப் போய்க் கேள் ; ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவான்' என்று திருப்பிவிடுகிறார்கள்.

அரிசிக் கடையிலே நீயிருந்துகொண்டு என்னை போடச் சொன்னால், மரியாதையாகக் கடையை விட்டு நீ கீழே இறங்கிவிடவேண்டுமல்லவா ?

அதை விட்டுவிட்டு, ஆட்சிப் பொறுப்பிலே அவர்களே இருந்துகொண்டு ரூபாய்க்கு 3 படி அரிசி போட முடியுமா?' என்று கேட்டால் என்ன பயன் ?

நண்பர்களெல்லாம் சொன்னார்கள்—'ரூபாய்க்கு 3 படி அரிசி...' என உதயசூரியன் எழுதியிருக்கிற இடத்திலெல்லாம் காங்கிரசார் எழுதியிருப்பதாக ! தோழர்களுக்டிச் சொல்லுவேன்- 'திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால்" என்று அதற்கு மேலே ஒரு வரி எழுதிவிட்டால் நாட்டுக்குத் திருப்தியாகிவிடும்!

'திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், ரூபாய்க்கு 3-படி அரிசிகிடைக்கும்; ரூபாய்க்கு 3-படி அரிசி கிடைக்க வேண்டுமானால், பக்கத்திலே இருக்கிற உதயசூரியனைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று நீங்கள் இப்பொழுதே தேர்தல் பிரச்சாரம் செய்துகொள்வதற்கு அந்த எழுத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்!

ரூபாய்க்கு 3 படி அரிசி போட முடியவில்லையென்றால் மந்திரிகள் ஒரு அறிக்கை விடட்டும்—'எங்களுக்கு விலையைக் குறைக்கிற திட்டம் தெரியவில்லை; எங்களாலே விலையைக் குறைக்க முடியாது ; இதைப்போலத்தான் அரிசி விற்கும், என்று அல்லது இப்படியாவது சொல்லுகிறார்களா என்றால் அதுவுமில்லை !

இவர்களிலே ஒருவராயிருக்கும் ஜோதி அம்மையார் சில தினங்களுக்குமுன்பு ஒரு இடத்திலே பேசுகிறபொழுது, 'கொஞ்சம் பொறுங்கள்; இன்னும் இரண்டொரு மாதங்களிலே ரூபாய்க்கு ஒன்றரைப் படி அரிசியாவது போடுகிறோம்' என்று சொன்னார்கள். ஆனால் சொன்னவர் சுகாதார மந்திரியே தவிர, உணவு மந்திரி அல்ல !

'உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்கிறேன்' என்று சொல்லவேண்டியவர் உணவு மந்திரி ! நல்ல சாப்பாடு சாப்பிட்டால்தான் சுகாதாரம் கெடாமல் இருக்க முடியும்; அதை எண்ணியோ என்னவோ ஜோதி அம்மையார் அவர்கள், 'என்னிடத்திலே சுகாதாரத்தைக் கொடுத்து மக்களுக்குச் சோறு போடாவிட்டால், நான் எப்படிச் சுகாதாரத்தைக் கவனிக்க முடியும்' என்று கருதி, மற்ற மந்திரிகளை இடித்துக்காட்டுவது போல், 'கொஞ்சம் பொறுங்கள்; ரூபாய்க்கு ஒன்றரை படி அரிசி போட்டுக் காட்டுகிறேன்' என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் !

அவர்கள் அதை அங்கு சொன்னதற்குப் பதில் அமைச்சரவைக் கூட்டத்தில் சொல்லியிருக்கவேண்டும், ஏனென்றால் தனிப்பட்ட அமைச்சர்களின் வார்த்தைக்கு அதிகமான மரியாதை ஜனநாயகத்திலே இல்லை. அமைச்சரவை கூடி ஒரு முடிவெடுத்தால்தான் அது சட்டமாக உருவெடுக்க முடியும், ஆகவே, அமைச்சரவை கூடி 'ரூபாய்க்கு ஒன்றரை படி அரிசி ஆகஸ்டு மாதத்திற்குள் போடுகிறோம்; செப்டம்பர் மாதத்திற்குள்ளே போடுகிறோம்' என்று சொல்லுவார்களேயானால், அதை நிறைவேற்றுவதற்காக அமைச்சர்கள் பேசினார்கள்—என்று பொருள். அமைச்சர் கக்களிடத்திலே தான் உணவு இலாகா இன்றையத் தினம் இருக்கிறது. அவராவது, 'இருங்கள்; ஒன்றரைப் படி அரிசி போடுகிறேன்' என்று சொன்னாரா என்றால், அவரும் சொல்லவில்லை ! ஆனால் ஜோதி அம்மாள் சொல்லுகின்றார்கள்—'நான் ஒன்னரை படி அரிசி போடுகிறேன்'—என்று!

எனவே உணவு பிரச்சினையில்—உணவு விலை இறங்கும் பிரச்சினையில் இந்தச் சர்க்காரினுடைய திட்டவட்டமான கொள்கை என்ன'?—விலை இறங்குமா ? இறங்காதா'? இறக்கப் போகிறார்களா ஏற்றிக்கொண்டே இருக்கப் போகிறார்களா? இதை அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

இதை அவர்கள் மக்களுக்குத் தெரிவிப்பதுதான் மிக முக்கியமான—தேர்தலுக்குப் பின்பு அறிவிக்க வேண்டிய மிக முக்கியமான பிரச்சினைகளாகும்.

[1 —4—62 தஞ்சைக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி ]

# திராவிடரைக் காட்டுகிருர் திரு. வி. க.

'திராவிடரைக் காட்டமுடியுமா?' என்று கேட்டார் தமிழக முதலமைச்சர். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், திராவிடரையும் — அவர்தம் கலாச்சாரம், நாகரீகம் ஆகியவற்றை எடுத்துக்காட்டி அது விடுதலை பெற்றே தீரும் என்று பல ஆண்டுகளுக்கு முன்னரே சுட்டிக்காட்டியுள்ளார்.

கடைசி காலத்தில் நம் இயக்கத்தின்மீது, தமிழ்ப் பெரியார், காட்டிய ஆர்வம், மிக மிக அதிகமாகும். 1948 அக். 23, 24ம் நாட்களில், ஈரோட்டில் நம் பொதுச் செயலாளர் அண்ணு அவர்கள் தலைமையில் நடைபெற்றதிராவிடர்கழக மாநாட்டில், 'திராவிடநாடு' படத்தைத் திறந்து வைத்து, அவர் ஆற்றிய, ஆணித்தரமான சொற்பொழிவின் சில பகுதிகள், அதனை மீண்டும் படிக்கும்போது, கண்கள் குளமாகின்றன! எத்தகைய அறிவுச் செல்வம் அவர்! இந்த மண், அவரது தலைமையைப் பெருமல் அவரை இழந்து விட்டதே!]

★

"திராவிட நாட்டுப் படத்தை நான் திறந்துவைப்பது பொருந்துமா என்று பல தடவை யோசித்துப் பார்த்தேன். முடிவில், இந்நாட்டு மக்கள் எல்லோருமே திராவிடர்கள்தான், நானும் திராவிடன் தான். எனவே, தாராளமாகத் திறந்துவைக்கலாம், அதில் ஒன்றும் தவறில்லை என்கிற முடிவுக்கு வந்தேன்"

•

"உண்மையோடும், உறுதியோடும், வீராவேசத்தோடும் கேட்போர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியும்படி பேசக்கூடிய எண்ணற்ற இளைஞர்கள் இருக்கும்போது, திராவிடநாடு பிரிவினை அடைவதில் சிறிதும் ஐயப்பாடு இருக்கக் காரணமில்லையென்று நான் துணிந்து சொல்லுவேன்"

∴

"திராவிடர்கள் என்பதற்கு எனது ஆராய்ச்சியில் பல பொருள்கள் தென்பட்டன. அவற்றுள் இரண்டைமட்டும் ஈண்டுஎடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். திராவிடர் என்ருல், ஓடுபவர்கள் என்று ஒரு சாரரும், ஓட்டுபவர்கள் என்று மற்ருேர் சார்பாரும் கூறுகின்றனர். வடமொழிச் சார்புடையார் முன்னைய அர்த்தத்தையும், சிவஞான முனிவர் அவர்கள் பின்னைய அர்த்தத்தையும் கூறுகிருர்கள். இவற்றுள் எதைக் கொள்வதென்பது உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்,

ஓட்டுகிறவர்கள் என்ருல், மாசை —அசுத்தத்தை--ஓட்டுகிறவர்கள்-மனத்துக்கண் உள்ள மாசை ஓட்டுபவர்கள் என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டும். 'மனத்துக்கண் மாசிலனுதல் அனைத்திறன்' என்கிற அறத்தின்வழி நடந்தவர்களே திராவிடர்கள்"

•

"திராவிடம்" என்கிற சொல் 'பிராமி' மொழியிலும் இருக்கிறது பிராமி மன்னன் நிக்லஸ் ஆட்சிச் சரித்திரத்தில் திராவிடர்களைப் பற்றிக் குறிப்பு காணப்படுகிறது. ஸ்மிருதியிலும், பஞ்சத் திராவிடம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. மலையாளம், தமிழகம், ஆந்திரம், கேரளம், அவற்ருேடு மராத்திதேசம் ஆகிய ஐந்து திராவிடங்கள் குறிப்பிட்டிருக்கின்றன. மலையாள தேசத்தில் பிறந்து வளர்ந்து வடமொழி கற்று சவுந்தர்ய லகரி என்ற சமஸ்கிருத நூல் எழுதிய சங்கராச்சாரியாரும் அப் புத்தகத்தில் திராவிடர்களைப்பற்றி குறிப்பிட்டுள்ளார் எல்லையப்பர் அவர்களின் மொழி பெயர்ப்பின் மூலம் நாம் இதை அறியலாம்.



சுமார் 55 ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த சபாபதி நாவலர் என்கிற தமிழ் வாணரால் எழுதப்பட்ட திராவிடப் பிரகாசிகை என்கிற வார்த்தைக்கு பல ஆதாரங்கள் காட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இன்று இந்நாட்டின் தேசியப் பாட்டாக வழங்கிவரும் ஜனகணமனவிலும் கவி ரவிந்திரநாத் தாகூர் அவர்கள் 'திராவிட உட்கல வங்கா' என்ற வரியில் திராவிட நாட்டைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக்காணலாம்.

திராவிடநாடு என்று ஒரு நாடு தொன்றுதொட்டு இருந்துவந்திருக்கிறதென்பதற்கு இவ்வாதாரங்களே போதும் என நினைக்கின்றேன். இத்திராவிட நாட்டிற்கு எல்லை குறிப்பதும் மிகச்சிரமமான காரியமல்ல. சரித்திரமே சுலபமாகநிர்மாணித்துவிடும் எந்தெந்தபகுதிகள்திராவிட நாட்டைச் சேர்ந்தவை என்று.

•

எனவே திராவிடம் என்று ஒரு பகுதி இருந்து வருகிறது என்பதைப்பற்றியோ அல்லது அதன்எல்லையைக் குறிப்பிடுவதுபற்றியோ யாரும் நம்மோடு சர்ச்சைக்கு வர முடியாது.

ஒருகாலத்தில் தமிழ்நாடு மிகமிக உயர்ந்திருந்தது. பிறகு வடவரின் சுரண்டலுக்கு ஆட்படவே இன்று மிக மிகத் தாழ்ந்துவிட்டது சுரண்டலுக்கு உள்ளடக்கிய வடநாடு மிகமிக உயர்ந்து நிற்கின்றது இன்று.

அந்நியன் சுரண்டல் பெருகப் பெருக பிரிவினை உணர்ச்சியும் பெருகுவது நிச்சயம்.

•

இன்று சிலர் கேட்கிருர்கள், திரரவிட நாடு பிரிந்தால் தனித்து வாழ முடியுமா என்று. நிச்சயமாகத் தனித்து வாழ முடியும். இன்றைய நிலையைக் காட்டிலும் பன்மடங்கு உயர்நிலையில் வாழ முடியும் என்று அதிதிடமாகச் சொல்லுவேன்."

"இந்நாட்டில் எதுதான் இல்லை. மலைகள் இல்லையா? இருபுறமும் கிழக்குத் தொடர்ச்சிமலையும், மேற்குத் தொடர்ச்சி மலையும் இருக்கின்றனவே; செழிப்பான நெல்விளையும் நிலப்பரப்பில்லையா? எரிமலைச் சாம்பல் நிரம்பிய இயற்கை வளம் பொருந்திய மண்ணல்லவோ இந்நாட்டு மண், அதில் எதுதான் விளையாது! ஆறுகள் இல்லையா, இந்நிலப் பரப்பை வளம் செய்ய? அதற்கும் குறைவில்லாத வகையில் கோதாவரியுண்டு, கிருஷ்ணு உண்டு, காவிரி உண்டு, பாலாறு உண்டு. இன்னும் எத்தனை வேண்டும்? உலோகங்கள் இல்லையா? கோலார் தங்க வயல்கள் எந்நாட்டைச் சேர்ந்தவை? ஐதராபாத்திலுள்ள மணிமலைகள் எந்நாட்டைச் சேர்ந்தவை? அந்த மணி மலைகளை வெட்டி எடுப்போமானுல், இந்த அகண்ட உலகத்தையே விலைக்கு வாங்கி விடலாமே, இந்நாட்டில் என்ன? இரும்புக்குத்தான் குறைவா? கவலையோடு பூமியைத் தோண்டிப் பார்த்து ஆராய்ச்சி நடத்திவந்தால் இந்நாட்டில் எதுதான் கிடைக்காது என்று நினைக்கிறீர்கள்? எல்லாம் கிடைக்கும்."

∴

"எத்தனையோ வழிகளில் இந்நாட்டில் தலை விரித்தாடிக்கொண்டிருக்கும் தரித்திரத்தை எங்களால் போக்கிக் கொள்ள முடியுமே, தனித்தியங்கும் நாடுகளைப் பிரித்து தனியாக இயங்கும்படிச் செய்து ஏதோ சொற்ப அதிகாரங்களை மட்டும் மேலெழுந்தவாரியாக, மத்திய சர்க்காருக்கு வைத்துக்கொள்வதை விட்டு இமயம் முதல் குமரிவரை ஒரே ஆட்சியின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று பாடுபட்டு வருகிருர்களே அது சாத்தியமா? வங்காளத்தை ஒன்ருக்க முடிகிறதா? ஐக்கிய மாகாண மக்களுக்கு. சமாதானம் சொல்ல முடிகிறதா? எங்கே இருக்கிறது ஒற்றுமையும் ஒருமைப்பாடும். காங்கிரஸ்காரர்களிடையேயாவது காணப்படுகிறதா ஒருமைப்பாடு? இவர்கள் ஆளும் இந்தியாவில் ஒருமைப்பாடு இருக்க?"

•

"தோழர்களே! ஆகஸ்ட்வரைதான் எனக்கு காங்கிரசின் மீது பற்றுதல் இருந்தது. ஆகஸ்டு 15ம் தேதி அதிகாரம் மாறிய அன்றே என் மனமும் மாறிவிட்டது. சுதந்திரம் வந்துவிட்டதாகக் கருதப்பட்ட அன்றைய தினமே காங்கிரஸ் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். கலைக்கப்பட்டிருந்தால் எவ்வளவோ நன்ருய் இருந்திருக்கும். காங்கிரஸ் இவ்வளவு கீழ்நிலைக்கு வருவதைக் காணவேண்டியிருக்காது.

40 ஆண்டு காலத்திற்கு மேலாக நாங்கள் உழைத்து உழைத்து வளர்த்துவந்த காங்கிரஸ் தொழிலாளர்களுக்குள்ள எல்லா குறைகளையும்போக்கும் என்ற நம்பிக்கையில் தொழிலாளர்களால் வளர்க்கப்பட்டு வந்த காங்கிரஸ், முடிவில் தொழிலாளர்களின் வயிற்றிலேயே

[16-ம் பக்கம் பார்க்க]

பதிவு எண் : 7178 திராவிடன் விலை 25 காசு. . தொலைபேசி 33581




ராஜாஜியின் தட்சிணப் பிரதேசத் திட்டமும், கழகக் கொள்கையான திராவிட நாட்டுத் தனி உரிமைத் திட்டமும் ஒன்று தானே? விரிவான விளக்கம் தேவை.

காவண்ணன், செந்தாரப்பட்டி, ஆத்தூர்வட்டம், சேலம் மாவட்டம்.

விளக்கம் 1. திராவிட நாட்டுத் தனி உரிமைத் திட்டமும்—தட்சிணப் பிரதேச அமைப்புத் திட்டமும் வெவ்வேறானவை. தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மாநிலங்களும் மொழிவழி அடிப்படையில் தனித்தனி உரிமை பெற்று இயங்குதல் வேண்டும். இந்நான்கு மாநிலங்களுக்கும் பொதுவான பிரச்சினைகளை மட்டுமே நான்கு மாநிலங்களின் சம உரிமை — எண்ணிக்கை கொண்ட பிரதிநிதிகள் அடங்கிய அமைப்பு ஆராய்ந்து நிறைவேற்றி வைக்க வேண்டும். அந்த அமைப்புதான் திராவிட நாட்டுக் கூட்டாட்சியாகும்.

தட்சிணப் பிரதேசத் திட்டம் என்பது தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும் ஒரே சர்க்காராக அமைத்து நிர்வாகம் நடத்துவதாகும். அதாவது அந்தந்த மொழிவழி மாநிலம் பிரிவதற்கு முன்னால் இருந்த அமைப்பைப் போன்ற தென்றும் கூறலாம் இந்தத் திட்டத்தை ஆச்சாரியார் கூறிவருகிறார் என்பது மட்டுமல்ல; காங்கிரஸ் தலைவர்களில் சிலர்கூட இன்று அக்கருத்தை வெளியிட்டு வருகிறார்கள்.

ஏன், தமிழக முதலமைச்சர் காமராஜர் கூட, சில தினங்களுக்கு முன்புபேசிய காங்கிரஸ் கூட்டமொன்றில், மொழிவழி மாநிலம் அமைந்ததே பெருந்தவறாகிவிட்டது என்று சலிப்போடு குறிப்பிட்டிருக்கிறார்!

ஆச்சாரியார் அவர்கள் தலைசிறந்த அரசியல் வல்லுநர்தான். அதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை. ஆனால் அவர் சொல்ல வேண்டிய கருத்துக்களை காலங் கடந்து சொல்லுவார். அதனாலேயே அவரது அறிவாற்றல் பொதுவாக நாட்டுக்குப் பயன் படமுடியாமல் வீணாகிறது.

மொழிவழி மாநில அரசுகள் மட்டுமல்ல; மொழிவழி அடிப்படையில் காங்கிரஸ் அமைப்புக்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று காங்கிரசார் முனைந்து நின்றபோது அதற்கு ஊக்கத்தை அளித்துவிட்டு, அதற்குப் பிறகு மாநில அரசுகளும் அந்த அடிப்படையிலேயே அமையப் பெற்று இயங்கி வரும் இன்று அதற்கு மாறாக நான்கு மாநிலங்களும் சேர்ந்த அரசாக அமைய வேண்டும் என்று மனதால் எண்ணுவது கூட நாட்டுக்குப் பெருங் கேட்டையே விளைவிக்கும்.

மொழிவழி உணர்வை உச்ச நிலைக்கு தட்டி யெழுப்பிவிட்டு, இன்று அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகளைவிவேகத்துடன் ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது உரிமையை மேலும் வழங்குவதற்கு பதிலாக அளித்த சாதாரண உரிமையையும் தட்டிப்பறிப்ப தென்பது அறிவுடமையாகாது.

இப்போதுள்ள அரசியல் நிலையில் இனிமாநிலங்கள் இன-மொழி அடிப்படையில் உரிமைபெற்று வாழ்வதற்கான திட்டத்தை எவ்வளவு விரைவில் மனப்பூர்வமாக நிறைவேற்றி வைக்கப் படுகிறதோ அந்த அளவுக்கு இந்தியத் துணைக்கண்டத்தில் அமைதியும் மக்களிடையே நல்லுறவும் ஏற்படும். மற்ற எந்தத் திட்டமும் வெறுப்பையும் விரோதத்தையுந்தான் வளர்க்கும்.

⁂

தமிழ் மாநில கவர்னரின் சட்ட மன்றப் பேச்சில் உப்புமில்லை உறமுமில்லையென்று சட்டமன்ற சுதந்திரக் கட்சி தலைவர் சா. கணேசன் கூறுகிருரே? இதுபற்றி உங்கள் கருத்து?

சி. கோபாலன். திருச்சி-8.

விளக்கம் 2. தற்போதுள்ள உணவுப் பொருள் விலை ஏற்றத்தால் உப்பும் உறமுமான உணவுப் பொருள்களைத் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை கவர்னருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று கருதுகிறேன்.

⁂

தமிழ்நாட்டு முதலமைச்சர் கனம் காமராஜர் பொதுக்கூட்டங்களில் பேசும்போது தி. மு. கழகத்தைத் தாக்கிப் பலாத்காரத்தைத் தூண்டும் அளவுக்கு பேசுகிருரே—நியாயமா?

—சி. ஆர். வீராசாமி, காஞ்சி.

விளக்கம் 3. மற்றவர்களின் நியாயத்தைப்பற்றி மந்திரிகளுக்கு என்ன அக்கறை! அவரது பதவியும் ஜபர்தஸ்தும் பிசுபிசுத்துப் போகக் கூடிய அளவுக்கு அவரது கட்சியிலேயே எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறபடியால் அந்த எரிச்சலில் கழகத்தைத் தாக்குகிருர்! ஐயோ பாவம்! ஆகட்டும் பார்க்கலாம்!

-'சாக்ரடீஸ்'

---

15-ம் பக்கத் தொடர்ச்சி.........

அடிக்க ஆரம்பித்துவிட்டதென்ருல் அத்தொழிலாளர்களை காங்கிரஸைப் பின்பற்றி நடக்கும்படி செய்த எங்கள் மனம் பொறுக்குமா?"

•

"திராவிடர் இயக்கம் தன் அறப் புரட்சியின் மூலம் வெற்றி பெறும் போதுதான் தொழிலாளர் வாழ்வும் மலரும்.

புரட்சியில் இருவகை யுண்டு. ஒன்று அறப்புரட்சி. அதாவது அகிம்சை புரட்சி. மற்ருென்று மறப்புரட்சி. அதாவது ஹிம்சை புரட்சி. நமது அண்ணுதுரை அவர்கள் குறிப்பிட்ட பிரென்சுப் புரட்சியும், ரஷியப் புரட்சியும் மறப்புரட்சிகள், நம் காந்தியார் நடத்திய புரட்சியோ அகிம்சைப் புரட்சி. ஆனால் அதன் மூலம் பெற்ற சுயராஜ்யமோ ஹிம்சைமயமாக மாறிவிட்டது. சுயராஜ்யம் வந்த பிறகு சுயராஜ்ய சர்க்கார் அகிம்சாவாதிகளின் மீதே குண்டுகளை வீசி வருகிருர்கள். சாத்வீக மறியல் செய்த தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிருர்கள். தொழிலாளர்களின் வீடுகளில் புகுந்து குண்டாந்தடிகளால் அடித்து தொழிலாளர்களை பயமுறுத்தி இருக்கிருர்கள். ஆனால் லெனின் மறப்புரட்சியின் மூலமே வெற்றிபெற்ருர் என்ருலும் வெற்றிக்குப் பிறகு அவர் எவ்வளவோ சாத்வீகமானவர் ஆகிவிட்டார்."

•

"எவ்வளவு எடுத்துக்கூறினுலும் வடவரும் திராவிடரும் ஒன்றென்று பிதற்றிக்கொண்டு வருகிருர்களே! ஆராய்ச்சி நூல் எதையேனும் படித்துப் பார்த்ததுண்டா நீங்கள்? திராவிடப் பண்பின் மேன்மையை ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள் கூட ஒப்பக்கொண்டிருக்கிருர்களே!

வீட்டுக்கு எல்லைக் கட்டியவனுயிற்றே தமிழன்! அறம், பொருள், இன்பம் இவற்றிேைடு தன் வாழ்க்கைக்கு எல்லையை நிர்மாணித்துக் கொண்டவனுயிற்றே தமிழன்! தொல்காப்பியர் முதல் திருவள்ளுவர் ஈருக எந்தத் தமிழனும் இவற்றைத் தாண்டி எதும் இருப்பதாகச் சொல்லவில்லையே! 'கேபிடல்' என்கிற உலகம் போற்றும் பொருளாதார தத்துவ நூலை எழுதிய கார்ல் மார்க்ஸ் என்பவரும் இதைத்தானே கூறியுள்ளார்! திருவள்ளுவர்கூறிய அறம், பொருள், இன்பம் இவற்றுடன் நின்ற தமிழர்கள் தம் நாட்டை இழந்தாரில்லை. நாகரீகத்தில், அறிவு வளர்ச்சியில், எதிலும் குறைந்தாரில்லை."

"இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முன் பொருளீட்டி அறம்செய்து இன்பம் துய்த்து வாழ்ந்த தமிழகம் இன்று பொருளாதாரத்தில் அன்னியனுக்கு அடிமைப்பட்டு அறம் செய்ய வக்கின்றி இன்பம் எப்படி இருக்கும் என்று தெரியாது இன்னல் வாழ்க்கை வாழ்கிறதே! இது கண்டு திராவிடன் ஒவ்வொருவனும் இரத்தக் கண்ணீர்விடவேண்டாமா?

•

அன்று சொன்னேன் நிலக் கோட்டையில் எனது கடைசி மூச்சுக்கூட திராவிடம் வாழ்க திராவிடர் கழகம் வாழ்க என்பதாக இருக்கும் என்று. இன்று துணிவுடன் கூறுகிறேன் இன்னும் 10 ஆண்டுகளில் திராவிடநாடு பிரிந்து தனி அரசாகத் திகழுமென்று.

நீங்கள் மட்டும் உங்கள் முயற்சியைக் கைவிடாது இருந்துவருவீர்களானுல் கண்டிப்பாகக் காணலாம் 10 ஆண்டில் திராவிடத் தனி அரசை.

•

## மேதின வரலாறு!

15 மணி நேர வேலை; 12 மணி நேரம் இயந்திரத்திற்கடியிலே! 'முடியாது; நாங்களும் மனிதர்கள்தான்.'—இந்த மூல முழக்கம் அமெரிக்காவில் கிளம்பியது—1878-ல்!

மூல முழக்கம் வலுத்தது. பாட்டாளிகள் தமது உரிமையைக் கோரி வேலை நிறுத்தம் செய்தனர். அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரத் தொழிலாளர்கள்! 'எட்டு மணி நேரம் வேலை செய்வோம்' என்று கிளம்பிய எதிரொலியைக் கண்ட ஆதிக்கபுரி, தொழிலாளர்களை அடக்குமுறைக்கு ஆளாக்கிற்று. தொழிலாளர்கள் குருதி கொட்டிய அத்தினமே மே முதல் தினம்—இது 1886-ல்!

சர்க்காரின் அடக்குமுறை கண்டு கொதித்தெழுந்த தொழிலாளர்கள் மாபெரும் கண்டனம் காட்டினர். அதைக் கலைக்க, அமெரிக்க அரசு போலீஸ் படைகளை அணிவகுத்து அனுப்பியது; இதுவும் சிகாகோவில்தான்—மே நாலாந்தேதி நடைபெற்றது, இந்நிகழ்ச்சி! யாரோ சிலர், போலீஸ் படைகள் மீது வெடிகுண்டு வீசினர் 1886-ல்!

நாடெங்கும் கைது! நான்கு பேர் நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டு, ஓராண்டு வழக்கு நடைபெற்றது; கடைசியில், அந்த நான்கு தொழிலாளர்களுக்கும் தூக்குத் தண்டனையளிக்கப்பட்டு, பட்டப் பகலில் நிறைவேற்றப்பட்டது நால்வர் பிணமாயினர்—நவம்பர் 11ந் தேதி—1887-ல்!

உலகமே கலங்கியது! உலகத் தொழிலாளர் அதிர்ச்சி யடைந்தனர்! அதனால், பாரீசில் கூடிய அகில உலகத் தொழிலாளர்கள், அந்நாளை, 'உலகப் பாட்டாளி மக்களின் எழுச்சி தின'மாகக் கொண்டாடுவதென முடிவு செய்தனர். மே தினம் உண்டாயிற்று—தீர்மானம் மூலம்—1889-ல்!

ஆசிரியர், வெளியிடுபவர் : என். வி. நடராசன், அச்சிடுபவர், சோமு அச்சகம், 168, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1

# "இந்தியா" - "ஹிந்தியா"?

**தூத்துக்குடி ஜோசப்**

நாடெங்கும் பொதுத்தேர்தல்கள் நடந்துமுடிந்து முதல் பாராளுமன்றக் கூட்டமும் நடைபெற்றுவிட்டது. முதல் கூட்டத்திலேயே அடுத்தடுத்து நான்கு முறை இந்தி வெறியர்கள் தங்கள் ஆதிக்கமனப்பான்மையை வெளிப்படுத்திவிட்டனர். அகில இந்தியத் தத்துவம் பேசுகிறவர்களுக்குக்கூட ஆத்திரம் வருமளவுக்கு காரியங்கள் அங்கு நடைபெற்றிருக்கின்றன.

பதவிப் பிரமாணம் எடுக்கும் போது ஒரு இந்தி தெரிந்த உறுப்பினர் தமிழில் பிரமாணம் எடுத்தார். தமிழைக் கேலி செய்யவோ—அல்லது அவருக்கு அப்படிப் பேசுவது ஏதோ ஒரு பொழுதுபோக்கோ—அல்லது உண்மையிலேயே வடக்கு தெற்கு என்ற மனப்பான்மையை வளரவிடக்கூடாது என்ற நல்லெண்ணமோ தெரியவில்லை. அவர் அப்படிப் பிரமாணம் எடுத்தார்.

உடனே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு இந்தி உறுப்பினர், "தமிழில் இவர் சொல்வதன் பொருள் இவருக்கே தெரியாது. எனவே பொருள் தெரியாமலேயே பிரமாணம் எடுப்பதை நான் ஆட்சேபிக்கிறேன்" என்று சொன்னார். ஆனால் இந்திய உபகண்டத்தில் 14 மொழிகளில் ஏதாவது ஒன்றில் பிரமாணம் எடுக்கும் அனுமதி அரசியல் சட்டத்தில் இருப்பதால் இவரது கோரிக்கை கேட்பாரற்று அனாதையானது. தனது இந்தி வெறிக்கு பயனில்லாமல் போனது கண்டு பெரிதும் வருந்தினார்.

ஆனால் தமிழகத்திலிருந்துபோன ஒரு காங்கிரஸ் உறுப்பினர் தனது அடிமைத்தனத்தை மெய்ப்பிக்கும் வகையில் இந்தியில் பேசியதும் ஆட்சேபணை கிளப்பியவர் உட்பட அனைவரும் கையொலி செய்து ஆரவாரம் செய்தனர். இந்தி உறுப்பினர் தமிழில் பேசும்போது ஆத்திரம் வருகிறது—தமிழ் உறுப்பினர் இந்தியில் பேசும்போது மகிழ்வு பிறக்கிறது.

மந்திரி பதவியை ஏற்கும்போது அமைச்சர் சுப்பிரமணியம் ஆங்கிலத்தில் பிரமாணம் எடுத்தார். தன்னுடன் சேர்ந்த தமிழர்கள் ஒருவருமில்லாத இடத்தில் தனித்து, தமிழில் பதவிப் பிரமாணம் எடுக்க அச்சமோ என்னவோ தெரியவில்லை. ஆனால் பாராளுமன்றத்தில் தமிழில் பிரமாணம் எடுத்தார்—பல தமிழ் உறுப்பினர்கள் இருக்கிறார்கள்—அவர்களும் தமிழில்தான் எடுப்பார்கள் என்பதால் ஏற்பட்ட தைரியமோ என்னமோ தெரியவில்லை. அல்லது நம்மவர்கள் எழுவர் அங்கே போயிருப்பது கண்டு அவர்களெல்லாம் தமிழில் உறுதி எடுக்க தான் மட்டும் ஆங்கிலத்தில் எடுத்தால் நாடு பூராவிலும் "தமிழ்ப்பற்று உள்ளவர் என்று தன்னைச் சொன்னாரே சுப்பிரமணியம். பார்த்தீர்களா! நாங்களெல்லாம் தமிழில்தான் பிரமாணம் எடுத்தோம். அவரோ ஆங்கிலத்தில் கட்டித்தழுவுகிறார்" என்று சொல்லித் தொலைப்பார்களே என்று எண்ணினாரோ என்னவோ தெரியவில்லை. அது எப்படி இருந்தாலும் அதன் பின்னர் அவர் பேசிய ஒரு கூட்டத்தில் ஒரு உண்மையைக் கக்கிவிட்டார்.

"நான் தமிழில் பிரமாணம் எடுத்ததைப் பார்த்த அவர்கள் என்னையும் பிரிவினைவாதியோ என்று அச்சப்பட ஆரம்பித்துவிட்டார்கள்" என்று கூறினார். இதிலிருந்து தெரிவது என்னவென்றால் தனது தாய்மொழியில் உறுதியெடுப்பது கூட பிடிக்காத கடைந்தெடுத்த வெறியர்களாக அவர்கள் காட்சியளிக்கிறார்கள் என்பதுதான்.

உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் ஆங்கிலத்தில் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்த ஆரம்பித்தார். உடனே ஒரு இந்தி வெறியர் கூச்சலிட்டு 'இந்தி தெரிந்த இவர் ஏன் ஆங்கிலத்தில் பேசுகிறார். இந்தியில்தான் பேச வேண்டும்' என்று சொன்னார்.

உடனே அந்த உ.பி.காரர் 'இத்தகைய மொழி வெறிதான் இந்தி பேசாத மக்கள் நம்மீது வெறுப்படையக் காரணமாகிறது' என்று குறிப்பிட்டார்.

சத்திரத்திலே படுத்து, பஜனைப் பாடிக்கொண்டிருக்க வேண்டிய நிலையிலுள்ளவர்கள் பாராளுமன்றத்தில் நுழைந்து விட்டதுமின்றி அவர்களும் தங்களது இந்தி வெறியைக் காட்டத் தலைப்பட்டிருக்கின்றனர். பகவான் நாமத்தை பஜித்துக்கொண்டு பரலோக யாத்திரைக்கு வழி என்ன என்பதை யோசிக்கவேண்டிய ரகத்தைச் சேர்ந்த காவி உடை தரித்த ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வந்திருக்கிறார்.

அவர் சேத் கோவிந்ததாஸ் என்ற ஒரு உறுப்பினர் இந்தியில் கேட்ட கேள்விக்கு மந்திரி ஆங்கிலத்தில் பதில் சொல்லியது தவறு இந்தியில் தான் சொல்லவேண்டும் என்று இரண்டுமுறை எழுந்து நின்று ஆட்சேபம் தெரிவித்தார். மந்திரியோ கேள்வி கேட்டவரே தனது ஆங்கில பதில் கண்டு அமைதியாய் இருக்கும்போது அடுத்தவருக்கென்ன இதில் தலையிட உரிமை என்று பதில் கொடுத்தார்.

இதற்குள் சேத் கோவிந்ததாஸ் என்ற உறுப்பினரே எழுந்து தான் இந்தியில் கேட்ட கேள்விக்கு இந்தியில் பதில் கிடைக்குமென்றே தான் கருதியதாகவும் அதற்காக மந்திரியை இந்தியில்தான் பதில் சொல்ல வேண்டும் என்று தான் வற்புறுத்தத் தயாராய் இல்லை என்றும் சொன்னார், காவி உடை தரித்தவர் கம்மென்று அடங்கிப்போனார்—கரகோஷம் சில இடங்களிலிருந்து கிளம்பியது.

இத்தகைய விபரீதப் போக்கு களைக் கண்ட, அனந்தநம்பியார், தான் ஒரு அகில இந்திய வாதியாக இருந்தும்கூட, இனித் தான் தமிழிலும், மலையாளத்திலும்தான் பேச நேரிடும்' என்று எச்சரிக்கை விடுத்தார்.

மேற்கண்ட நான்கு சான்றுகளும் இந்தி வெறியர்களின் உண்மை நிலையை நமக்குத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. எப்படியேனும் தங்களது ஆதிக்கத்தைப் புகுத்தவேண்டும் என்றும் அதற்கு அடிப்படை மொழித் திணிப்புத்தான் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். இந்த அநீதிகளை எல்லாம் நேரில் பார்த்த நமது கழகப் பாராளுமன்றத் தலைவர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் பாராளுமன்றத்திலேயே இதற்கு எச்சரிக்கை விடுத்தார்.

மொழித் திணிப்பின் மூலம் 'கட்டாயமாக இந்திய ஒற்றுமை வலியுறுத்தப்படுகிறது. இந்தி பேசுவோர் விரும்புவது இந்தியாவா அல்ல 'ஹிந்தியா'வா என்று அழகாகக் குறிப்பிட்டார்.

இந்தியைப் பொது மொழியாக்க வேண்டும் என்பதற்கு அவர்கள் சொல்லும் காரணமே இந்தியாவிலுள்ள மக்கள் அனைவரும் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வதற்கு ஒரு பொதுமொழி தேவை—அது இந்தியாக இருக்கவேண்டும் என்பதுதான், இந்தியாவின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மட்டும்தானா மக்கள் போகிறார்கள்? அமெரிக்காவுக்கோ, ரஷ்யாவுக்கோ, லண்டனுக்கோ போகவில்லையா? அப்படியானால் உலகத் தொடர்புக்கு ஒரு பொது மொழி வேண்டாமா என்றால் அதற்கு ஆங்கிலம் என்கிறார்கள். உலகம் முழுமைக்கும் தொடர்புகொள்ள ஆங்கிலம் பொது மொழி என்றால் அந்த உலகத்தின் ஒரு பகுதியாகிய இந்தியாவுக்கு இன்னொரு பொதுமொழி எதற்கு? இந்தியா உலகத்திற்குள்ளேதானே இருக்கிறது? சந்திரமண்டலத்திலா இருக்கிறது—தனிப்பொதுமொழிதேவை என்று சொல்ல.

ஆகர்ஷண சக்தியையெல்லாம் கண்டுபிடித்த நியுட்டனின் சின்ன வயதில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை நான் பள்ளியில் படிக்கும்போது ஆசிரியர் சொல்லியிருக்கிறார். Cat and the Kitten என்பது அந்தப்பாடத்தின் தலைப்பு. பூனையும் பூனைக்குட்டியும் வளர்த்தானாம் நியுட்டன். இரவு தூங்கும்போது அவைகளை வெளியே விட்டுவிடுவானாம். ஆனால், அவைகளின் மீது அவனுக்கு அளவற்ற பிரியம். குளிர் தாங்காமல் அவைகள் கஷ்டப்பட்டால் வீட்டுக்குள் வருவதற்கு கதவில் இரண்டு துளைகளைப் போட்டிருந்தானாம். ஒன்று சிறிய துளை—பூனைக்குட்டி வருவதற்கு. மற்றது பெரிய துளை—பூனை வருவதற்கு. அந்தச் சமயத்தில் நாம் அவனைப் பார்த்தால் என்ன சொல்லுவோம்.

"இவன் என்ன முட்டாளாக இருக்கிறான். பெரிய துளை ஒன்று போதாதா? அதில்தான் பூனை, பூனைக்குட்டி இரண்டுமே போய்விடுமே. சின்ன துளை எதற்காக அவசியம்" என்றுதானே சொல்லுவோம்.

பொது மொழிப் பிரச்னையில் இந்திய சர்க்கார் செய்யும் முடிவும் இத்தகைய போக்கில்தான்! உலகம் பூராவுக்கும் ஒரு பொதுமொழியைக் குறிப்பிட்டுவிட்டால் அந்த உலகத்தில்தான் இந்தியாவும் அடங்கிவிடுமே. இந்தியாவுக்கென்று தனிப் பொது மொழி எதற்கு?

இதைக் கேட்கும்போது என்ன இருந்தாலும் ஆங்கிலம் அன்னியன் மொழி. இந்தி, இந்தியாவில் பேசப்படும் மொழி எனவே ஏற்க வேண்டும் என்கிறார்கள். இந்தி பேசாத ஏனைய மக்களுக்கு இந்தியும் அன்னிய மொழிதானே. அது மட்டுமின்றி ஆங்கிலேயன் அன்னியன்தான் — அதற்காக அவன் மொழியைப் பழிப்பதில் என்ன பொருள்? அவன் கண்டுபிடித்த சாதனங்களைப் பயன்படுத்தலாமாம் —மொழியைப் பயன்படுத்தக் கூடாதாம்.

எனவே இந்தியைப் புகுத்தி தனது ஆதிக்கத்தை நிலைநாட்டப் பாடுபடும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முன்வந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவு கொடுப்பதன் மூலம் தான் இதற்கு சரியான நிவாரணம் தேட முடியும். "எப்பக்கம் வந்து புகுந்துவிடும்—இந்தி எத்தனை பட்டாளம்கூட்டிவரும்" என்பதில் இரண்டில் ஒன்றைப் பார்க்கத் தான் போகிறது நமது கழகம்.

●


## உடனே தேவை

திராவிடன் இதழுக்கு கீழ்க் கண்ட ஊர்களில முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை.

| | | |
|---|---|---|
| செங்கற்பட்டு | ... | |
| காஞ்சிபுரம் | ... | மணச்சநல்லூர் |
| குன்றத்தூர் | ... | தொட்டியம் |
| மீஞ்சூர் | ... | ஈரோடு |
| மதுராந்தகம் | ... | கோவை |
| ஆம்பூர் | ... | குன்னூர் |
| ஆண்டிமடம் | ... | கணியூர் |
| ஆடுதுறை | ... | பொள்ளாச்சி |
| மதுக்கூர் | ... | வத்தலக்குண்டு |
| வேதாரண்யம் | ... | கீழாவூரணி |
| நாகூர் | ... | பரமக்குடி |
| திட்டக்குடி | ... | சிவகெங்கை |
| திருவனந்தபுரம் | ... | ராசபாளையம் |

விவரங்கட்கு

நிர்வாகி: திராவிடன்

163, வால்டாக்ஸ்ரோடு, சென்னை

# விடுதலை பெற வேண்டு
# அதனைத் தடுக்க விரும்
## சென்னையில் அறிஞர்

**டெல்லி சென்று தாயகம் திரும்பிய அண்ணா அவர்கள், 3—5—62 அன்று சென்னை மாவட்ட தி. மு. கழக சார்பாக சென்னை எஸ். ஐ. எ. எ. திடலில் நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில், ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் :—**

•

**அன்புள்ள தலைவரவர்களே!**

**அருமைத் தோழர்களே!**

கடந்த 15 நாட்களாக உங்களை எல்லாம் விட்டுப் பிரிந்திருந்து, அதனால் ஏற்பட்டுள்ள நெஞ்சத்து நெருக்கடியை நினைத்தால் பேசாமல் உங்களையே பார்த்துக் கொண்டிருக்கலாம்போல தோன்றுகிறது. கடமை உணர்ச்சி காரணமாக டெல்லி சென்ற நான் புதிய இடத்தில் கடமை உணர்ச்சியில் சுழன்றுக்கொண்டிருந்தேன். டெல்லிக்குப் போவதற்கு முன்னால் எனக்கு மாபெரும் வழி அனுப்பு உபசாரம் நடத்த இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுவந்தது. ராஜ்ய சபையில் எனக்கு பேசவே சந்தர்ப்பம் கொடுக்காவிட்டால் வழி அனுப்பு உபசாரத்திற்கு அருத்தமே இல்லாமல் போய்விடுமே என்பதற்காகத்தான் அம்மாதிரி விழா நடத்த வொட்டாமல் ஏமாற்றத்தை அளித்தேன்.

சரி, டெல்லிக்குப் போகும்போது தான் இவ்விதம் ஏற்பட்டது, சமாதானம் சொன்னாய் ஒப்புக்கொள்கிறோம். வரும்போது ஏன் ஏமாற்றினாய்? என்று கேட்க உங்கள் மனது துடிப்பதை நான் அறியாமலில்லை. டெல்லியிலிருந்து சென்னை வருவதென்றால் பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்னமேயே இடம் பிடித்தாகவேண்டும். காரணம் அங்கு அவ்வளவு கடுமையான வெப்பம். அவ்விடமிருந்து சென்னை போன்ற இடங்களை நோக்கித் தினசரி ஏராளமானவர்கள் டிக்கட்டுக்குக் காத்திருக்கிறார்கள். எனவே நான் வருவதாகத் திட்டமிட்டிருந்த விமானத்தில் இடம் கிடைக்கவில்லை —ஆதலினால்தான் இந்த ஏமாற்றம் !

இந்த ஏமாற்றத்தாலும் ஒரு வகையில் பலன் இல்லாமற்போகவில்லை. அண்மையில் நடைபெறயிருக்கும் மாநகராட்சித் தேர்தலுக்காக நீங்கள் இவ்வளவு திரளாகக் கூடியிருந்து 3500 ரூபாய் போல நிதியும் வழங்கியிருக்கிறீர்கள். எனது ஏமாற்றத்தால் தொல்லை இருக்காது. பலன்தான் ஏற்படும் என்பதால் நீங்கள் இனி கோபப்படமாட்டீர்களென்று நம்புகிறேன்.

டெல்லியில் எனக்கோ, அங்கு சென்றுள்ள மற்ற நம்முடைய கழக நண்பர்களுக்கோ எந்தவிதமான தொல்லையும் ஏற்படவில்லை. அங்கு வெய்யில் அதிகமாக உள்ளது. ஆனால் இங்கு (சென்னையில்) உள்ள வெப்பத்திற்கும் அங்குள்ள வெப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது. பிரிவினை மனப்பான்மைக்காரனுக்கு இதில் கூடவா வித்தியாசம் தெரிய வேண்டும் என்று கேட்கலாம்.

அங்கு வறட்சி கலந்த வெப்பம் காரணமாக வியர்வை வெளியே வராது. இதனால் வெப்பம் தணியாமல் உடலுக்குள்ளேயே வேதனை அதிகமாகத் தருகிறது. இந்த வெப்பத்தை அரசியலுக்கும் ஒப்பிடலாம். டெல்லி ராஜ்ய சபையில் நான் பேசிய பேச்சு அங்கு உள்ளவர்களுக்கு அதிகமான வெப்பத்தைக் கொடுத்துள்ளது. அதனால் தான் என்னை அடுத்துப் பேசிய அத்தனைபேரும் மனம்தீரப் பேசி வெப்பத்தைக் குறைத்துக்கொண்டார்கள்.

டெல்லியில் எங்களுடன் மற்றவர்கள் மிக நேசத்தோடு பழகி மிக அன்புடன் நடந்துகொண்டார்கள். "திராவிட முன்னேற்றக் கழகத்தவருடன் பேசினால் காமராஜருக்குக் கோபம் வருமோ, அதனால் அடுத்த தேர்தலில் நமக்கு காங்கிரஸ்டிக்கெட் கிடைக்காமல் போய்விடுமோ" என்ற கிலி பிடித்தது போல இங்கு உள்ள காங்கிரஸ்காரர்கள் நடந்துகொள்வார்கள். ஆனால் அங்கு அப்படி நடக்கவில்லை. நல்ல பணி ஆற்றினோம் என்ற மனத் திருப்தியோடு இப்போது திரும்பி உள்ளேன்.

ராஜ்ய சபையில் பதவி ஏற்க நான் சென்றபோது தனியாகத்தான் சென்றேன். நான் துணிச்சலாகப் பேசக்கூடியவன் என்றாலும் தனிப்பட்ட முறையில் அவ்வளவு துணிச்சல் இல்லாதவன் கூச்சப்படுகிறவன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ராஜ்ய சபைக்குள் நான் நுழைந்ததும் மந்திரிகள் உட்காரும் வரிசையில் அமர்ந்திருந்த அமைச்சர் சுப்பிரமணியம் தன்னுடைய இருக்கையிலிருந்து எழுந்து வந்து மலர்ந்த முகத்துடன் வரவேற்று கைகுலுக்கி மற்றவர்களுக்கு

# உயிர்ப் பிரச்சினையாகிவிட்டது
# நமது முழக்கம்!

என்னை அறிமுகப்படுத்தி, நான் உட்காரவேண்டிய இடத்தையும் காட்டி உட்காரவைத்தார். தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட நான் தமிழிலேயே கையெழுத்தும் போட்டேன்.

என்னையோ அல்லது நான் சார்ந்திருக்கும் கழகத்தையோ அழிக்க கங்கணம் கட்டிக்கொண்டுள்ள காங்கிரஸ்காரர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். எங்களைப் பற்றி சட்டமன்றங்களில் உள்ள ஆதாரப் பத்திரங்களை நீங்கள் அழித்தால் ஒழிய எங்களையோ அல்லது எங்களுடைய கொள்கைகளையோ உங்களால் அழிக்க முடியாது.

வரலாற்றிலிருந்து எங்களை அகற்றிவிட உங்களால் முடியாது என்று காங்கிரஸ்காரர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ஒரு ஆளை அகற்றுவது அல்லது அழித்து ஒழித்து விடுவது சுலபமாக இருக்கலாம். ஆனால் ஒரு லட்சியத்தை அகற்றுவது இயலாதது.

பழைய ரெவின்யூ மந்திரி மாணிக்கவேலர் இப்போது என்னுடன் ராஜ்ய சபையில் அங்கத்தினர். "என்ன அண்ணாதுரை நீங்கள் ஏன் பிரயாணத்தை தள்ளிப் போட்டீர்கள்? ஹைதராபாத்தில் உங்கள் கட்சிக்காரர்கள் மாலையுடன் விமானநிலையத்தில் காத்துக் கொண்டிருந்தார்கள். அண்ணா வரவில்லையா? என்று கேட்டார்கள். இந்த விமானத்தில் வரவில்லை என்று நான் சொன்னதும் உங்களுக்குப் போட இருந்த மாலைகளை எனக்குப் போட்டார்கள்" என்று மாணிக்கவேலர் சொன்னார். அதற்கு நான் மாணிக்கவேலரிடம் சொன்ன பதில் இதுதான். 'எனக்கு உரியது எல்லாம் உங்களுக்கு உரியது. ஆனால் உங்களுக்கு உரிய ஒன்றும் எனக்கு வேண்டாம்" என்று மாணிக்கவேலரிடம் சொன்னேன்.

பிரிவினைப் பேச்சால் டெல்லியில் கோபத்தைவிட பயம்தான் அதிகம் உள்ளது. வயது முதிர்ந்தவரும், முன்பு மத்திய அரசாங்க மந்திரியாகவும், வட மாநிலங்கள் சிலவற்றில் கவர்னராகவும் இருந்து இப்போது ராஜ்ய சபையில் அங்கம் வகிக்கும் வயது முதிர்ந்த ஜெயராம்தாஸ் தவுலத்ராம் எனக்கு பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு "அண்ணாதுரை நீங்கள் கேட்பது பிரிவினையா?" என்று என்னிடம் கேட்டார். "ஆம்" என்றேன். "பிரிவினையா?" என்று இருமுறை அழுத்தமாகக் கேட்டார். நானும் "பிரிவினை"தான் என்று சொன்னேன்.

என்னிடம் பேசிய அந்த முதியவரிடம் (தவுலத்ராமிடம்) நீங்கள் யார் என்று கேட்டேன். "நான் சிந்து மாகாணத்தைச் சேர்ந்தவன் இப்போது அது பாகிஸ்தானில் உள்ளது. முன்பு நான் மத்திய உணவு அமைச்சராகவும், மாநில கவர்னராகவும் இருந்தவன்" என்று அந்தப் பெரியவர் என்னிடம் சொன்னார். இவ்வளவு பெரிய ஆள் "பிரிவினையா?" என்று கேட்கும் போது அவர்களுடைய உருக்கம் நம்மைப் பரிதாபப்பட வைக்கிறதே தவிர மனம் ஆடுவதோ அசைவதோ மனத்தை அலைய விடுவதோ ஏற்படவில்லை. இதில் என்னைவிட அழுத்தமாக மற்ற ஏழுபேரும் இருக்கிறார்கள்.

நம் பிரிவினைக் கொள்கை பற்றிக் கேட்டாரே; அவர் யாரப்பா என்று நண்பர் ராசாராமிடம் ஒருமுறை கேட்டேன். "பெயரைப் பற்றி என்ன அண்ணா கவலை? யாரோ வடநாட்டுக்காரர்" என்று அழுத்தமாகவும், ஆணித்தரமாகவும் அங்குள்ள நம்முடைய நண்பர்கள் சொன்னார்கள். பரவாயில்லை; இந்தப்பிள்ளைகள் எல்லாம் பிழைத்துக் கொள்ளும் என்று நான் எண்ணி மகிழ்ச்சி அடைந்தேன்.

திருவிழாவுக்குப் போகும் குழந்தை, பார்க்கிற பொம்மைகளை எல்லாம் கேட்கும். ஆனால் திருவிழாவுக்குப் போகிற குழந்தையை பொம்மைக் கடை பக்கம் திருப்பாமல் தேர்பக்கமே திருப்பும் தாயைப் போல அங்கு சென்றுள்ள நம்முடைய தம்பிமார்கள் கவனம் பொம்மைப் பக்கம் போகாமல் தேர்ப்பக்கம் (நம் கொள்கைப் பக்கம்) திரும்பும் தாய் வேலை எனக்குத் தரப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரிந்த உடன் ஏற்பட்ட பயங்கரங்களையும், நடைபெற்ற கொலை, கொள்ளைகளையும், ரத்த வெள்ளமும்தான் டெல்லியில் உள்ளவர்களுக்குத்தெரிகிறது. டெல்லிக்குப் போனதில் ஒன்றைப் புரிந்து கொண்டேன். அதுதான் "தம்பி சம்பத்" ஏன் மாறினான் என்பதற்கான காரணம்.

அழுத்தமான கொள்கைப்பற்று இல்லாத யாரையும் டெல்லியில் உள்ள சூழ்நிலை மாற்றிவிடும். இதைப் பார்த்ததும்தான் தம்பி சம்பத் ஏன் மாறிவிட்டான் என்பது எனக்குப் புரிந்தது.

டெல்லி சட்டசபை ஆனாலும் ராஜ்யசபை ஆனாலும் அங்கு மகாராஜாக்கள் தண்ணீர்பட்டபாடு. பிகானீர் மகாராஜாவும். ஜெய்ப்பூர் மகாராஜாவும் இதுபோல எத்தனையோ மகாராஜாக்கள் டெல்லியில் உள்ள மத்திய சட்டசபை அல்லது ராஜ்ய சபையில் அங்கத்தினர்கள். பிரிவினைக் கொள்கையை கொஞ்சம் தளர்த்திக் கொண்டால் மகாராஜாக்களுடன் உலாவி வரலாம். மாநிலக் கவர்னர்களுடன் அவர்களுக்குப் பக்கத்தில் உட்காரலாம். ஆனால் இது ஏற்படுவது யாருக்கு. கொள்கையில் ஆழமான பிடிப்பில்லாதவர்களுக்கு.

பிரிவினையை எதிர்ப்பவர்கள் மிகப் பெரிய ஆள்களாயிற்றே அவர்கள் மிகக் குழைந்து கேட்கிறார்களே, நாம் அவர்களின் குழைவுக்கு விட்டுக்கொடுத்தால் என்ன! இந்தத் திராவிட நாடு எப்போது கிடைக்குமோ என்ற சபலம் டெல்லிக்குச் சென்றுள்ள எனது தம்பிமார்களிடம் துளிகூட இல்லை. பிரிவினையை மகாராஜாவாயிருந்தாலும், மாஜி கவர்னராகயிருந்தாலும் அவர்களைப் பற்றிக் கவலைப்படாத உறுதியான உள்

# மானால் எங்கள் உயிர்! பினால் உங்கள் உயிர்!

## அண்ணா சூளுரை!

ளம் கொண்டவர்களைத்தான் டெல்லிக்கு நீங்கள் அனுப்பியிருக்கிறீர்கள். மத்திய சட்டசபையில் நம் கழகத்தைச் சேர்ந்த மனோகரன், செழியன், ராசாராம் ஆகிய மூன்று பேரும் இதுவரை பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சைப் பாராட்டாதவர்கள் இல்லை. சொல்லவேண்டியதைத் தெளிவாக எடுத்துச் சொன்னீர்கள்; திட்டவட்டமாக எடுத்துச் சொன்னீர்கள், என்று பாராட்டினார்கள். அவர்கள் மூவரும பேசுவதற்கு முன்னால் என்னைக் கலந்து பேசினார்கள். பேசுவதற்கு முன்பு என்னைக் கலந்து பேசினால் தவறு என்ற நோய் கொஞ்ச காலம் கழகத்தில் பரவிவந்தது. அது அங்கு காணப்படவில்லை.

திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கையைப் பற்றி பேசும் பாரத்தை என்னிடம் விட்டுவிடுங்கள் என்று சொன்னேன். ராஜ்ய சபையில் பேசிய நான் அழுத்தம் திருத்தமாக ஆணித்தரமாக பிரிவினைக் கொள்கையை எடுத்துரைத்தேன். பலரும் பாராட்டினார்கள்.

டெல்லியிலே எங்களிடம் பலர் சொன்னார்கள். இந்தப் பிரச்சினையை விட்டுவிடாதீர்கள். நீங்கள் இப்படிப் பேசுவதால் தான் தென்னாட்டுக்கு ஏதேனும் ஓரளவாவது கிடைக்கிறது. இப்போதைக்கு இப்பிரச்சினையை விட்டுவிடாதீர்கள். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றார்கள். இப்படிச் சொன்னவர்கள் வேறு யாருமல்ல; காங்கிரசுக்காரர்கள். அதில் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களும் உண்டு. அவர்களுடைய பெயரைச் சொல்லி அவர்களுக்கு அரசியல் ஆபத்து ஏற்படுத்த நான் விரும்பவில்லை.

ஆனால் அரசியலில் நம்பவைத்து ஏமாற்றுவது அறநெறி அல்ல. பிரிவினை என்றால் பிரிவினைதான். பிரிவினைபோலப் பேசிப் பிறகு கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு ஓடுவது என்பது நம் கொள்கை அல்ல. கதவு இல்லாத வீட்டில் புகுந்து கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு ஓடும் கயவன் வேலையாகும். பிரிவினை தவிர நமக்கு வழி ஏதும் இல்லை; வேறு விமோசனமும் இல்லை. நம்முடைய அரசியலில் நயவஞ்சகம் கொஞ்சம்கூட இருக்கக்கூடாது. காங்கிரஸ்காரர்கள் அதைத்தான் செய்கிறார்கள். இன்றில்லாவிட்டாலும் எதிர்காலத்தில் ஒருநாள் வடவர் இதை புரிந்து கொள்ளத்தான் போகிறார்கள்.

உயிரைக் கொடுத்தாகிலும் பிரிவினையைத் தடுப்போம் என்று டெல்லி ராஜ்ய சபையில் இந்தப் பிரச்சினைபற்றி எல்லோரும் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். நிச்சயமாக எங்களுடைய பிரிவினைக் கோரிக்கை உயிர் கொடுக்கப்பட வேண்டிய பிரச்சினைதான்.

பிரிவினையைப்பெற வேண்டியது என்றாலும் எங்கள் உயிரைக் கொடுக்கவேண்டும். நாங்கள் கோரும் பிரிவினையைத் தடுக்க வேண்டும் என்றாலும் உங்கள் உயிரை நீங்கள் கொடுத்துதான் ஆகவேண்டும். ஆகவே நிச்சயமாகச் சொல்கிறேன். இது உயிரைக் கொடுக்கப்பட வேண்டிய பிரச்சினைதான்.

நாம் மூட்டிவிட்டுள்ள தேசியத் தீ, உயிர்ப் பிரச்சினை ஆகி டெல்லியில் கொழுந்துவிட்டு எரிகிறது. அதைத்தான் நான் அங்கு காண்கிறேன். நம்முடைய இந்தக் கோரிக்கை இந்த மாநிலத்தில் உள்ள பழைய மந்திரிகள் கையைவிட்டு டெல்லிப் பட்டினத்திற்குப்போய் பல மாதங்களாகிவிட்டது. திராவிட நாடு பிரிவினைப் பேச்சை தடுக்கிற இலாகாவை டெல்லி ஏற்றுக்கொண்டுள்ளது. இங்குள்ள அமைச்சர்களுக்கு உள்ள வேலை சேரிகளில் போலீசை ஏவிவிட்டு அப்பாவி மக்களை பயமுறுத்தி. மிரட்டும் இலாகாதான் கொடுக்கப்பட்டுள்ளது.

“பிரிவினை ஏற்படவிடமாட்டோம். உயிரைக் கொடுத்தேனும் தடுப்போம் என்று பேசியவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆமாம் நண்பர்களே, ஆமாம். பிரிவினையைப் பெற வேண்டுமானால் எங்கள் உயிர்; தடுக்கவேண்டுமானால் உங்கள் உயிர். எப்படி எங்கள் உயிரை வாங்கப் போகிறீர்கள்? அல்லது உங்கள் உயிரை இழக்கப் போகிறீர்கள்? என்பதனை தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

இங்கு வந்ததும் நான் ஒரு தமிழ்ப் பத்திரிகையில் படித்தேன். அண்ணாதுரை கோரிக்கை நிராகரிப்பு—என்று தலைப்புப் போட்டிருந்தது. நான் என்ன நேருவிடம் கோரிக்கையைக் கொடுத்துவிட்டு உடனே பதில் வாங்கிவரவா போனேன். அதுமட்டுமல்ல, திராவிட நாட்டுப் பிரச்சினையைப் பற்றி ராஜ்ய சபை கூடும் போதெல்லாம் பேசத்தான் முடியுமா? சந்தர்ப்பம் ஏற்படும்போதுதான் அதுவும் அதைப் பற்றிப் பேசினால் பயன் ஏற்படும் என்று அறிந்து நான் அப்பிரச்சினையைப் பற்றி மேலும் வலியுறுத்துவேன். இதைக்கூட புரிந்துகொள்ளாமல் அந்தப் பத்திரிகை இவ்வாறு தலைப்புக் கொடுத்திருக்கிறது!

பிரிவினைக் கேட்டவுடன் கொடுத்துவிடுவார்கள் என்று நம்ப நான் என்ன அவ்வளவு பைத்தியக்காரனா? மூன்று தடவை வட்டமேஜை மாநாடு கூடிப் பேசியும் காங்கிரசின் சுயராஜ்யக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அறியாதவனா? உடனே என் கோரிக்கையை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் பேசவில்லை.

உயிரைக் கொடுப்போம்; பிரிவினையைத் தடுப்போம் என்று பேசினார்களே தவிர பிரிவினையால் என்ன ஆபத்து என்று யாரும் சொல்லவில்லை. அவர்கள் பேச்சில் ஆணவம்தான் தொனிக்கிறது; அதிகாரம் உள்ளது.

பிரிவினையை முழு வலிவோடு எதிர்ப்போம் என்று நேரு சொல்கிறார். இதைக் கேட்டுத்தான் நான் மெத்த வருத்தப்படுகிறேன். முழு வலிவோடு எதிர்க்காமல் முக்கால்வாசி வலுவை வீட்டில் வைத்துவிட்டு வந்து கால்வாசி வலிவோடு எதிர்ப்பார் என்றா எண்ணுவோம்?

நேருவுக்குச் சொல்லிக்கொள்கிறேன். உங்கள் வலிவைக் காட்டுங்கள். முழு வலிவையும் காட்டுங்கள். எங்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துள்ள அந்த வலுவை—பிரிவினைக் கோரிக்கையைப் போக்க உங்களால் முடியாது. உங்கள் வலுவைப் பார்த்தவர்கள்தான் நாங்கள். வலுவைக் காட்டினால் கொள்கையை விட்டுவிடுவோம் என்று எண்ண வேண்டாம். ஏமாறவேண்டாம்.

“தேர்தல்களில் நம்முடைய வெற்றியை அதிகப்படுத்தி சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் மற்ற இடங்களிலும் நம் கழக அபேட்சகர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக்காட்ட வேண்டும். அப்போதுதான் நமது பிரிவினைக் கோரிக்கைக்கு உள்ள ஆதாரத்தை—மக்கள் ஆதரவை நேரு பண்டிதர் புரிந்துகொள்வார்.

நான் டெல்லியிலிருந்த இந்தப் பதினைந்து நாட்களும் இங்கு நமது கழகப் பணிகள் எவ்வாறு நடக்கிறதோ என்றுதான் கவலைப்பட்டிருந்தேன். டெலிபோனில் என்னுடன் பேசிய தம்பி கருணாநிதியிடமும் இதுபற்றி விசாரித்தேன். அந்தக் குறிப்பை உணர்ந்து இவ்விடமிருந்து எல்லாப் பத்திரிகைகளையும் எனக்கு அனுப்பிவைத்தார் கருணாநிதி.

சட்டமன்றத்திலும், மக்கள்மன்றத்திலும் நமது கழகப் பணி சிறப்பாக நடைபெற்று வருவதை ஏடுகளின் வாயிலாகக் கண்டு பெருமைப்பட்டேன்.

நமது மாநில அமைச்சர்கள் நம்மைப்பற்றிக் கேவலமாகப் பேசுவதாகக் கருணாநிதி சொன்னார். அவர்களுக்கு இருக்கும் வேலை இது ஒன்றுதானே? மற்ற முக்கிய வேலையெல்லாம்தான் டெல்லி மந்திரிகளிடமிருக்கிறதே! பாபம் இதைத்தானே இவர்கள் செய்யவேண்டியிருக்கிறது.

கேரளாவிலும், கருநாடகத்திலும், ஆந்திரத்திலும் பிரிவினையை ஆதரிக்கிறார்களா? இல்லையே? என்று சிலர் பேசியிருக்கிறார்கள். இந்தியாவுக்குச் சுதந்தரம் வேண்டும் என்று காந்தியார் கேட்டபோது சூலைக்கும், சுருளிமலைக்கும் காட்பாடிக்கும், காஞ்சிபுரத்திற்கும் போய் ‘கந்தா உனக்கு வேண்டுமா சுயராஜ்யம்? காமாட்சி உனக்கு வேண்டுமா சுயராஜ்யம்? என்றா கேட்டார்? இல்லையே!

மக்களின் உள்ளத்தை அறிந்துகொண்டு பேசினார். வேண்டுமானால் ஒரு அவசர நெருக்கடி நிலைமையில் நம்முடைய பிரிவினைக் கோரிக்கையை காமராஜர் ஒத்துக்கொண்டாலும், கம்யூனிஸ்டுக் கல்யாணசுந்தரம் ஒப்புக்கொள்ள மாட்டார் என்பதையும் நான் அறிவேன். மக்கள் மனநிலை அறிந்துதான் பேசுகிறேன்.

இப்போது நான் பெருமைப்படுவதுபோல வாழ்க்கையில் என்றைக்குமே நான் பெருமைப்பட்டது இல்லை. டெல்லிக்குப்போய் அங்கு பாராளுமன்றத்தில் நம் கோரிக்கையை எடுத்துச் சொல்லும் வாய்ப்பு 1972-ஆம் ஆண்டிலோ அல்லது அதற்குப் பிறகோ எனக்குக் கிட்டும் என்று எண்ணியிருந்தேன். சில குழந்தைகள் 9 மாதத்திலேயே பிறந்துவிடும். அதைப் போல் இப்போதே எனக்கு இந்த வாய்ப்பு கிட்டியது குறித்து மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

அவர்கள் நினைத்திருந்தால் நாட்டைத் துண்டுபோடச் சொல்லும் என்னைச் சுட்டெரித்துவிட்டிருக்க முடியும். கழகத்தைச்சட்டவிரோதமாக்கி என்னையும் மற்றவர்களையும் சிறையிலிட்டிருக்க முடியும். நம்முடைய வலுவைத் தெரிந்துகொள்ளுங்கள். அவர்களுடைய பலவீனத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.

தொலைவில் போகிற ஒரு படகை தீவில் தன்னந்தனியாக நின்றுகொண்டிருப்பவன் படகில் உள்ளவர்கள் கவனத்தை தன் பக்கம் திருப்ப குப்பைகூளங்களை 'சேர்த்து புகையவிட்டு அதன்மூலம் படகில் உள்ளவர்கள் கவனத்தைத்திருப்புவான். தீவில் தன்னந்தனியன் குரல்கொடுப்பதுபோல ராஜ்யசபையில் தனியனாக நான் ஒருவன் உரிமைக்குரல் கொடுத்தேன்; எதிர்ப்பு கப்பல் எப்பக்கத்திலிருந்தும் வந்தது.

ராஜ்ய சபையில் பேசிய என்னுடைய பேச்சை அண்ணாதுரையின் ‘வெடிகுண்டுப் பேச்சு’ என்று வருணித்தார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இது ஒரு

[6-ம் பக்கம் பார்க்க]

## உலகத்தின் கவனத்தை ஈர்த்துவிட்டது நம் பிரச்சினை!

# பழத்தோட்டம்

"மா. தி."

# குரங்கு சோசலிஸம்!

## காந்தியாரின் உபதேசத்தை மறந்த காங்கிரசார்!

மூன்ருவது திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டு முயற்சிகளுக்காக 25 கோடி ரூபாய் செலவிட இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. காந்தியாரின் கனவுகளை நடைமுறையாக்கிவருவதாக வாய்ப்பறையடிக்கும் இவ்வரசினர் காந்தியாரின் கருத்தடைக் கொள்கையை எந்த அளவுக்குப் புரிந்துகொண்டனரோ தெரியவில்லை. 'Nonviolance in Peace and war' என்ற கட்டுரையில் காந்தியார் கருத்தடைக்காக மருத்துவமுறைகளை நாடுவதைப் பெரிதும் கண்டித்து, மன அடக்கமுறையே கருத்தடைக்குரிய—கட்டுப்பாட்டுக்கேற்ற -வழியென்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனுல், இன்றைய காங்கிரஸ் அரசின் நிலை என்ன? 25 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளது, மருத்துவ வழி முறைகளுக்காக. இந்தக் கட்டுப்பாட்டுத்திட்ட அளவிலே காந்தியார் கண்ட கனவு எங்கே நடைமுறைக்கு வந்தது? அந்த ராம ராஜ்ஜியத் தூதர் முழக்கிய துந்துபி காற்ருேடு கலந்து போய்விட்டது!

புதிதாகக் கதராடைக்குள்ளே புகுந்தவர்கள் பஜனைக்கு மட்டுந்தான் காந்தியாரின் பெயரை—ஒரு சடங்குபோல—உச்சரிக்கிருர்களேயொழிய அவரை நன்ருகப் புரிந்துகொண்ட அர்த்தத்திலல்ல. காந்தியாரின் கட்டுரையைப் படிப்பவர்கள் இன்றைய அரசு எந்த அளவுக்கு காந்தீயத் தத்துவங்களிலிருந்து மாறுபட்டுள்ளதென்பதைப் புரிய முடியும்? காந்தியார் வாழ்ந்த காலத்திலேயே அவரது தத்துவங்களின் சாதக பாதகங்களை மிகமிக நன்ருக விளக்கி எழுதியவர்கள் நாம். அப்போதெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு காங்கிரஸ் தேசபக்தர்கள் எதிர்ப்பை முழக்குவார்கள். நல்லதோ, கெட்டதோ கூறியது 'மகாத்மா' ஏற்றுக்கொள்ளுகிருயா, இல்லையா, என்றுதான் பிடிவாதங்கொண்டலைந்தனர்.

ஆனுல், இப்போதோ காந்தீயத் தத்துவங்களுக்கு மாருனது சட்டமாவதைப் பார்க்கிருேம். தேசபக்தர்கள் ஒரு பக்கத்திலே காந்தியாரின் தத்துவத்தைப் புதைகுழிக்கு அனுப்புவதோடு மறுபக்கம் நமது உண்மைக் குரலின உயர்தன்மை உலகறியச் செய்துவிட்டனர். இதற்காகவாவது அவர்களை ஒருமுறை பாராட்டத்தானே வேண்டும். உபதேசத்தை மறந்தாலும் நம்மவர் கூறிய உண்மைகளைப் புரிந்துகொண்டார்களல்லவா? இனியாகிலும் காலப் போக்கை ஒட்டி நடந்துகொள்ளட்டும்.

❖

## இங்கல்ல... உத்திரபிரதேசத்தில்..!

உத்திரப்பிரதேச மாநில அரசினர் தங்களது மாநில வளர்ச்சி குறித்து பல திட்டங்களைப்போட்டுள்ளனர், விரைவில் நடைமுறையாக்குவதற்காக. இதில் குறிப்பாக ......மூழாய் கிணறுகளின் செலவினங்களுக்காக ஒதுக்குவதாக இருந்த 311799000 ரூபாயை 352540000 ஆக உயர்த்தியிருக்கின்றனர். இதுபோலவே கால்வாய் அமைக்க ஒதுக்கிய தொகையான 831163000 ரூபாயையும் 893874000 ஆக உயர்த்தியுள்ளனர். மாநில அரசினர் நடத்தும் பஸ் போக்குவரத்தின் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான 110926000 ரூபாயை 151733000 ஆக உயர்த்தியிருக்கின்றனர், அரசினர் நடத்தும் சிமெண்ட் பாக்டரி போன்ற தொழிற்சாலைகளின் செலவினங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையான 47863000 ரூபாயும் 70495000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மற்ருெரு பிரிவான 2481000 ரூபாயும் 3757000 ஆக உயர்ந்துள்ளது......!

எங்கே?

உத்திரபிரதேசத்தில் இது நடைபெறுகிறது. இங்குள்ள மதிமந்திரிகள் வடநாட்டை நிமிர்ந்து பார்க்கத்தான் முடிகிறதேயொழிய—வடிகட்டிய அதன் ஆட்சித் திறனைப் புகழத்தான் முடிகிறதேயல்லாமல்—சி. பி. குப்தா போல துணிவேது இவர்களுக்கு. எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டிருக்கும் பட்டியலின் ரூபாய்க கலத்தை வாய் பிளந்து எண்ணிக்கொண்டிருக்கத்தான் இவர்களுக்குத் தெரியும், எங்கள் நாட்டுக்கும் (நாடு என்ருல்தான் வேறு பொருளாகிவிடுகிறதே? அவர்கள் மொழியில் மாநிலமென்றே வேண்டுமானுலும் சொல்லிக்கொள்ளட்டும்) இதுபோல அதிக நிதி உதவி தேவையென்று சொல்ல எப்போதுதான் துணிவு வரப்போகிறதோ? 'நமக்கு வேண்டியது மந்திரிபீடம்' என்று மட்டும் நினைத்துவிட்டார்களே இங்குள்ளவர்கள்.

மந்திரிபீடத்தில் அமருவதைவிட மக்களின் இதயத்தில் பீடம் அமைத்து வீற்றிருப்பதுதான் சிறப்பானது—நிலையானது என்பதை இன்றைய தென்னக மந்திரிகள் உணரவேண்டும். வடநாட்டில் பெருகும் வளத்தைக் கண்டாவது தேயும் தெற்குக்கு நல்லது புரியும் நினைப்புத் தோன்றட்டும் நம்மவர்களுக்கு. இளமைத் துடிப்புள்ள மந்திரி சபை என்று பெருமையடித்துக்கொள்வோர். ஜீவத்துடிப்புள்ள இந்தக் காரியத்தைச் செய்து முடிக்கிருர்களா வென்று பார்ப்போம்.

❖

## கேரளக்கூட்டு காங்கிரஸ் தீவிரம்

கேரளாவில் வருகின்ற நகராட்சி தேர்தலிலும், பஞ்சாயத்துத் தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியோடு இணைந்து போட்டியிட முழுமூச்சோடு முயன்றுவருகிறது. அடுத்த கட்சியோடு கூட்டுச் சேர்ந்து வெற்றி பெறுவது அரசியல் கண்ணியமாகாது என்று விண்ணதிர முழக்கிய காங்கிரஸ் பீரங்கிகள், கேரளத் தேர்தல் முயற்சியில் காங்கிரஸ் கடைபிடித்துவரும் போக்கினை நினைத்து விழிபிதுங்கி கைபிசைந்து நிற்கின்றனர்.

சொந்தக் காலிலே நிற்கும் தகுதி இன்னும் கேரளத்தில் கிடைக்கவில்லை என்பதை எண்ணி இங்குள்ள காங்கிரஸ் பெருந்தலைகள் கவலைமிகக் கொண்டுள்ளனர். மற்றவர்களுக்காக உதிர்த்த பரிகாசமொழிகள் திரும்பப் பறந்துவந்து தங்களையே தாக்குமென்ற நினைவும் இப்போது அவர்களை ஆட்டிப் படைத்து வருகிறது.

நடந்ததை—நடப்பதைச் சிந்திக்கும் ஆற்றல் இல்லாதவரை காங்கிரஸ் தேசியத்தாரின் 'மதளியாத நெஞ்சம்' 'உலகறிந்த ரகசியமாகத்'தானிருந்துவரும். தமிழகத்தின் கூட்டு கசப்பதாக முகம் கோணிய காங்கிரஸ் கேரளத்தில் அதே கூட்டு இனிப்பதாகக் கூறப் போகிறது, வருகிற தேர்தலில்.

நல்ல உள்ளப்படைத்த அரசியல்வாதிகள் காங்கிரசாரின் சொல்லுக்கும் செயலுக்கும் மாறுபட்டிருப்பதைக் கண்டு வியப்படைந்து நிற்கின்றனர். தேசியத் திருவாளர்களோ முகத்திலிருக்கும் கரியைக்கூடத் துடைத்துக் கொள்ளாமல் கேரள நகரசபை—பஞ்சாயத்துகள் தேர்தலுக்கான முஸ்தீபுகளில் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

❖

## கடன்பட்ட நெஞ்சம்!

'பொதுவுடமைப் பூங்கா' என்று பெருமிதத்துடன் இங்குள்ளபொதுவுடமைவாதிகளால் அழகுபட அழைக்கப்பட்ட 'செஞ்சீனு' பெருங்கடனுளியாகியிருப்பதை ரங்கூன் செய்தியொன்று வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது.

பர்மிய சர்க்காரிடமிருந்து கடனுகப் பெற்ற அரிசிக்காக இத்தகு நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. அந்நிய நாடுகளிடம் கடனும், உதவியும் வாங்கிக் கெட்ட நாடுகளைப்போலவே செஞ்சீனுவின் நிலையும் ஆகிவிட்டது பரிதாபத்திற்குரியதே.

கடன் கொடுத்த பர்மா சர்க்கார் மிரட்டிக் கொண்டிருக்கிறது. கடனுளி சீனு விழிபிதுங்க பிரான்ஸ், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலிருந்தும் பெற்ற உணவு தானிய இறக்குமதியும் போதாமலிருப்பதை எண்ணியும், கடன் கொடுத்த நெஞ்சங்களை நினைத்தும் கலங்கி நிற்கிறது.

❖

## இந்திக் கவிஞர் உண்மையைப்பாடினூர்

இந்திக் கவிஞர் மைதிலி சரண் குப்தா குடியரசுத் தலைவரின் பேச்சுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்போது மாநிலங்கள் சபையில் இந்திக் கவிதையிலேயே பாடல் இயற்றிப் பாராட்டைத்தெரிவித்தார். அப்போது, "லஞ்சஊழல்தான் நாட்டின் அடித்தளத்தையே அரித்துவருகிறது" என்று துணிவாகக்குறிப்பிட்டார் கவிஞர். இந்திக் கவிஞரைப் பாராட்டுகிருேம் உண்மையைக் குடியரசுத்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## அண்ணு சூளுரை - தொடர்ச்சி . . .

வெடிகுண்டு அல்ல. வெடிக்க வெடிக்க ஒன்றிலிருந்து இன்னென்றில் தீட்பிடிக்கும் சங்கிலித்தொடர் போன்ற வெடிவீச்சாக இருக்கும் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தியா ஒன்று என்பதை விளக்குவதற்காக இராமனையும் கிருஷ்ணனையும் இமயம் முதல் குமரி வரை வணங்குகிருர்கள் என்று ஆதாரத்தைச் சுட்டிக்காட்டும் பெரியவர்களில் ஒருவரான டாக்டர் ராதாகிருஷ்ணன்தான் அன்று தலைமை வகித்திருந்தார். அவர்கூட என்ன நினைத்துக்கொள்வாரோ என்று நான் சற்று எண்ணினேன். இருந்தாலும் நான் எனது பேச்சில், இயேசுநாதரை ஐரோப்பா கண்டம் பூராவிலும் வணங்குகிருர்கள் என்ருலும் அங்கு தேசிய நாடுகள் உள்ளன என்று குறிப்பிட்டேன். இங்குள்ளவர்கள் இந்த உண்மையை மறந்தது ஏனோ?

எனவே திராவிட கலாச்சாரம் தனித்தன்மையானது என்பதை நம்மை எதிர்ப்பவர்கள் அருள் கூர்ந்து உணரவேண்டும். அதற்கேற்றபடி நமது பிரச்சினையை இந்தியப் பிரதமர் கூர்ந்து கவனித்து அதை நிறைவேற்றுவதற்கு முன்வரவேண்டும். அதற்குப் பதிலாக எங்களை எதிர்ப்பதில் அர்த்தமில்லை என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழர்களே நான் இதுசமயம் உங்களுக்கெல்லாம் மனம்விட்டு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அங்கு வெளிப்பட்ட எதிர்ப்புகளை எல்லாம் எண்ணிப் பார்த்த பிறகு இன்று முதல் நாமெல்லோரும் ஒரு சூளுரை எடுத்துக்கொள்ளவேண்டும். கழகத்தின் முக்கிய பேச்சாளர்கள் ஒரே ஊரில் ஒரு நாளைக்குமேல் இல்லாமல் சுற்றிச் சுற்றி கழகப் பிரச்சாரம் செய்கிற வேலைதான். இனி தீவிரமாக நடத்தப்பட வேண்டிய ஒன்று. அழைத்துச் சென்று திராவிட நாடு தரப்படுகிறவரையில், அல்லது இழுத்துச் சென்று தூக்கு மேடையில் நிறுத்தப்படுகிற வரையில் ஓய்ச்சல் ஒழிவு இன்றி இந்த வேலையைத்தான் கழகத் தோழர்கள் இனி செய்யவேண்டும். நம்முடைய இந்தப் பணி தகுந்த பலனை தரத்தான் செய்யும். நம்முடைய கோரிக்கைக்கு ஆதாரம் என்ன? ஆதரவு என்ன? என்று நேரு கேட்டிருக்கிருர். தமிழகத்தில் 34 லட்சம் மக்கள் நமக்கு ஆதரவாக அளித்துள்ள வாக்குகளை அவர் எண்ணிப் பார்க்கவில்லை போலும்.

சென்ற இடத்தில், பிறந்த இடத்தின் பெருமையைப் பரப்பிவிட்டு மனநிறைவோடு வந்துள்ளேன்."

○